1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு மாசி மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 7-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### வெங்காயத்துக்கு உயர்ந்தவிலை

சின்னவெங்காயத்தின் உத்தரவாத விலை முதலாவதுதரம்ருத்தல்ஒன்றுக்கு 20 சதத்திலிருந்து 22 சதமாகவும், இரண்டாவதுதரம் ருத்தல்ஒன்றுக்குப் 18 சதத்திலிருந்து 20 சதமாகவும் உயர்ந்திருக்கிறது.

### புத்தூர் மத்தியசந்தை

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டின் காரியதரிசியாகமுன்னர்கடமைபார்த்த திரு. கே. எம். செல்லப்பா அவர்கள் சமர்ப்பித்த ஓர்மனுவின்பேரிலே புத்தூரில் மத்தியசந்தைக் கட்டடம்ஒன்றைநிர்மாணிக்க அரசாங்கம் சம்மதித்திருக்கின்றது. இதற்கென்று தலதாபன ஸ்தாபனக்கம்மிஷனர் ஒன்பதினாயிரம் ரூபா ஒதுக்கியிருக்கிறாரென்றும், இப்பணம் விரைவிலே கிராமச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

### வவனிக்குள நீர்ப்பாசனம்

வவனிக்குள நீர்ப்பாசனத் திட்டவேலை முடிவடையும்போது சுமார்ஆறாயிரம்ஏக்கர் வயல்நிலத்துக்கும், சுமார் இரண்டாயிரம்ஏக்கர்தோட்டநிலத்துக்கும் நீர்ப்பாசனஉதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுதீவிரமாக நடைபெற்றுவரும் அணைக்கட்டுவேலை பூர்த்தியானதும்காலபோகத்துக்குச் சுமார்ஆயிரம்ஏக்கர் வயல்நிலத்துக்கும், இதைத்தொடர்ந்து எழுநூறுஏக்கர் தோட்டநிலத்துக்கும் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படும்.

### சிங்களஎழுத்து வான்

ரோயல்மெயில்என்ற ஆங்கில எழுத்துகளுக்குப்பதில் சிங்களத்தில் எழுதப்பட்ட தபாற்பகுதி வான் ஒன்று யாழ்ப்பாணப் பெரியதபாற்கந்தோரின் பாவனைக்கெனச் சென்ற 14-ந்திகதி யாழ்ப்பாணம் வந்துசேரலாயிற்று. சிங்களவாக்கியம் எழுதப்பட்டு முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள முதல்வான் இதுவாகும். ஆனால், இது சேவைசெய்வதற்குப்பதில் தபாற்கந்தோரிலுள்ள காராஜிலேயே இருந்துவருகிறது. அதனை வெளியேகொண்டுசெல்வதால் தங்களுக்கு ஆபத்துஏற்படலாமென அங்குகடமைபார்க்கும் சாரதிகள் அஞ்சுவதாலேயே இந்தவான் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது. இதனைத் தாங்கள்செலுத்திக்கொண்டு செல்வதாயின் போதிய பொலிஸ்பாதுகாப்புத் தரப்படவேண்டுமென்று அவர்கள் கேட்கின்றனராம். இந்தமோட்டார்வானைத் தொடர்ந்து சிங்களத்தில் பெயர் எழுதப்பட்ட வேறும்மூன்றுவான்கள் யாழ்ப்பாணப் பெரியதபாற்கந்தோருக்கு வரவிருக்கின்றனவென்றும், அவற்றில்ஒன்று சிங்களஸ்ரீஎழுத்து இலக்கத்தகட்டைக் கொண்டிருக்குமென்றும் சொல்லப்படுகிறது.

### சிங்கள போனஸ்திட்டம்

சிங்களமொழியிலே அரசாங்க உத்தியோகஸ்தர்களின் திறமையைப் பரிசோதிப்பதற்காக இம்மாதமுடிவிற்குள் நடத்தப்படவிருக்கும் பரீட்சையில் சித்தியடைவாருக்குமட்டுமே போனஸ் வழங்கப்படும். அங்ஙனம் சித்தியடையும அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் போனஸ்வழங்குவதற்கென 60,000 ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இச்சிங்களப்பரீட்சையில் சித்திபெறும் 300 பேருக்குமட்டுமே போனஸ் கொடுக்கப்படுமாம். பரீட்சையும் மிகக் கடினமானதாய் இருக்குமாம்.

### தூண்டுகிறவர்களுக்கும் தண்டனை

ஓர் அத்தியாவசியதொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை வேலைநிறுத்தஞ்செய்யத் தூண்டிவிடாவண்ணம் அரசியல்வாதிகளையும், தொழிற்சங்கதலைவர்களையும், ஏனையோரையும் தடைசெய்வதற்கான சட்டம்ஒன்றை இயற்றத் தொழில்-சமூகசேவாமந்திரி டி. பி. இலங்காத்ன அரசாங்கத்தினிடம் அனுமதிகேட்டிருக்கின்றார். அங்ஙனம் தூண்டிவிட்டதாகக் கண்டுபிடிக்கப்படுகிறவர்களுக்கு 500 ரூபா அபராதம், அல்லது ஆறுமாத சிறைத்தண்டனை, அல்லது இருதண்டனைகளுமே விதிக்கப்படவேண்டுமென்று அவர் சிபாரிசுசெய்திருக்கின்றார்.

### சிங்களச் சுற்றறிக்கைகள்

தற்போது கல்விமந்திரி காரியாலயத்திலிருந்து மட்டக்களப்புப்பிரிவைச் சேர்ந்த பலபகுதிகளிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் சிங்களத்தில் அனுப்பப்படுவதாகப் பெருந்தொகையான பாடசாலைகளின் தலைமைஆசிரியர்கள் முறையீடுசெய்திருக்கிறார்கள். மட்டக்களப்புப்பிரிவிலுள்ள கிராமத் தலைமைக்காரருக்கும், கிராமமுன்னேற்ற சங்கங்களுக்கும் உள்நாட்டுமந்திரி காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் சுற்றறிக்கைகளும் முழுக்கச் சிங்களத்தில் அனுப்பப்படுவதாகவும், இதுவிஷயமாகப்பலரும் மந்திரிக்கு எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது. அங்குள்ள அரசாங்ககாரியாலயங்களுக்கும்பெருந்தொகையான அரசாங்கவெளியீடுகள் சிங்களத்தில் அனுப்பப்பட்டுக் குவிந்து போய்க் கிடக்கின்றன. இந்தச்சிங்களப்பிரசுரங்களை யாருக்கு வழங்குவதெனத்தெரியாது அதிகாரிகள் தயங்குகின்றனராம்.

### பறங்கிஆற்றுக்கு அணைக்கட்டு

பறங்கிஆற்றை அணைகட்டித்தடுத்து அதன்நீரைச் சுமார் பத்துமைல்நீளமானஓர்கால்வாயில்திருப்புவதன்மூலம் கமமுயற்சிகளுக்கு உதவிசெய்யுமாறு விடத்தல்தீவுமக்கள் காணிஅபிவிருத்திமந்திரிக்கு மனுப்பண்ணியிருக்கின்றார்கள். தற்போதுவீணாகக் கடலுக்குள் போய்விழும் பறங்கிஆற்றின்நீர் இவ்விதம்அணைகட்டித் தடுக்கப்பட்டால் அப்பகுதியிலுள்ள சுமார் 53 குளங்களை நிரப்பஉதவுமென்றும், அதனால் பருவகாலந்தவறாமல் கமக்காரர் நெற்செய்கையில் ஈடுபடுவதுடன் மேலும்அதிகமானகாணிகளை நெற்செய்கைக்குள்ளாக்க முடியுமென்றும் அம்மனுவில் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

### புதிய ஆயுர்வேத கல்லூரி

ஆயுர்வேத வைத்தியமுறைகளும், மேலைத்தேச வைத்தியமுறைகளும் ஒன்றுசேர்ந்த சுதேசவைத்திய கல்லூரிஒன்றைப் புதிதாகத்திறப்பதற்குச் சுதேசவைத்தியகல்லூரி அதிபர்பதவியிலிருந்து இராசினாமாச்செய்துள்ள டக்டர் ஆர். பி. லெனோராவும், சுதேச வைத்திய சபையின் தலைவர்பதவியிலிருந்து இராசினாமாச்செய்துள்ள கனம். மல்வான ஞானீஸரதேரோவும் தீர்மானித்திருக்கின்றனர். புதியகல்லூரி தேசீய வைத்திய கல்லூரியென அறியப்படும். இதனைத்தொடக்கி நடத்துதற்கென இவர்களால் ஏற்கனவே இரண்டு லட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது வேலைநிறுத்தஞ் செய்துவரும் அரசாங்க ஆயுர்வேதகல்லூரி மாணவர் மாணவிகளே இதில் முதன்முதலாகச் சேர்த்துப் பயிற்சியளிக்கப்படுவார்கள்.

### சிங்களமும் போனஸும்

சிங்களத்திலே அரசாங்க உத்தியோகஸ்தருக்குள்ள திறமையைச்சோதிக்குமுகமாக இம்மாதம் அவர்களுக்குச் சிங்களத்தில் ஓர்பரீட்சை நடத்தப்படவிருக்கிறது. இப்பரீட்சையில் சித்திபெறும் அரசாங்கஉத்தியோகஸ்தர்களுக்கே போனஸ்வழங்கப்படுமெனத் தெரியவருகிறது. இந்தப்பரீட்சையை நடத்த அரசாங்க உத்தியோக மொழிப்பகுதி தீர்மானித்துள்ளது. இப்பரீட்சையின்தரம் மிகஉயர்ந்ததாய் இருக்குமென்றும், போனஸ்வழங்கும் திட்டத்திற்கு இது ஓர்ஆரம்பபடியென்றும், சிங்களத்தில் அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் எவ்வளவுதூரம் திறமையடைந்திருக்கிறார்களென்பதை இப்பரீட்சை முடிவுகாட்டிவிடுமென்றும், அதில்சித்திபெறாதவர்களுக்கு போனஸ்கிடையாதென்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

### யாழ்ப்பாணமும் தண்ணீர்வசதியும்

யாழ்ப்பாணநகருக்கு நல்லகுடிதண்ணீர்வசதி அளிக்குந்திட்டத்தை விரைவில்ஆரம்பிப்பதாகப் போக்குவரத்துமந்திரி யாழ்ப்பாணமேயருக்குத் தெரிவித்திருக்கின்றார். இத்திட்டம்விரைவில் தயாரிக்கப்பெற்று, 1957–58-ம்ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் சேர்க்கப்படத்தக்கதாகச் செய்யப்படவேண்டுமென்ற மேயரின் கேள்விக்கு மந்திரிஅளித்தபதிலிலே இதுபற்றிய நடவடிக்கைகளை உடனே தானேஎடுப்பதாக வாக்களித்திருக்கின்றார்.

### தமிழ்த்தலைவர்களின் கொடும்பாவிகள்

சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது கண்டியிலே பிரசித்தமாகச் சுட்டெரிப்பதற்கென்று செய்யப்பட்டிருந்த ஐந்துகொடும்பாவிகளைக் கண்டிப்பொலிசர் சென்ற 15-ந்திகதியன்று கண்டிநீதிபதிமுன்பாகச் சமர்ப்பித்தார்கள். இந்த ஐந்துகொடும்பாவிகளில் நான்கும் தமிழ்த்தலைவர்களுடையனவாகும். மற்றொன்று, எதிர்க்கட்சித்தலைவரும், லங்காசமசமாசக் கட்சித்தலைவருமான டக்டர் என். எம். பெரேராவினதாகும். இந்தக்கொடும்பாவிகள் சுட்டெரிக்கப்படுவதை அனுமதிக்குமிடத்து, பொதுசனஅமைதிக்குப் பங்கம்ஏற்படக் கூடுமெனப்பயந்தே அவற்றைக் கைப்பற்றியதாகப் பொலிசர் நீதிபதியிடம் கூறினார்கள். தும்பு, துணி முதலியனகொண்டு திரிசிங்கள முன்னணியினரால் செய்யப்பட்ட இந்தக்கொடும்பாவிகள் ஐந்தும் திரு. விஜயரத்ன நம்புக்வலையின் தோட்டத்தில் எல்லோரும்காணக்கூடியதாய்த் தொங்கவிடப்பட்டிருந்தனவென்றும்; அவற்றுள்ஒன்றிலே 'பொன்னு' என்றும், மற்றொன்றிலே 'சுந்தரா' என்றும், இன்னொன்றிலே 'செல்லா' என்றும் எழுதப்பட்டிருந்தனவென்றும் தெரிவிக்கப்படலாயிற்று. இந்தக் கொடும்பாவிகளை ஊர்வலமாகக் கொண்டுசெல்லத் திரிசிங்களமுன்னணியினர் திட்டமிட்டுள்ளனரென்பதை முன்னதாகவே அறிந்திருந்தபொலிசர் கண்டிநகரின் பல்வேறுவீதிகளிலும் பலமானகாவல் வைத்திருந்தனர். அன்றுபிற்பகல் அவைகள் கைப்பற்றப்பட்டுப் பொலிஸ்நிலையத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டிருந்தன. அவைகளை நீதித்தலத்திலிருந்து அகற்றிவிடுமாறு நீதிபதி திரிசிங்களமுன்னணியின் சேனபதியான நம்புக்வலைக்கு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## பதினுன்கு பிரதமமந்திரிகள்

"இன்று லஞ்சஊழல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. கள்ளமாக் கெற்வியாபாரம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. கொள்ளைஇலாபம் அடிப்பவர்கள் இலகுவில் தப்பிவிடுகிருர்கள். ஏனெனில், இவைகள் சம்பந்தமாகப் பெரிய அபராதங்களோ, சிறைத்தண்டனைகளோ விதிக்கச் சட்டம் போதியஇடமளிக்கவில்லை. இவ் விஷயங்களைத் திருப்திகரமானமுறையில் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லையென்ருல— இந்தநாட்டில் எந்தத்துறையிலும் முன்னேற்றம் ஏற்படவில்லையென்ருல் அதற்கு முக்கியகாரணம், இன்றைய அரசாங்கத்தில் பதினுன்கு பிரதமமந்திரிகள் இருப்பதுதான்."

**டக்றர் என். எம். பெறேரு,**
எதிர்க்கட்சித் தலைவர்.

## தமிழ்மக்கள் கட்சி

"தமிழன் இந்தநாட்டில் தலைநிமிர்ந்து வாழவேண்டுமேயானல் அதற்கு ஐக்கியம் அத்தியாவசியமானதாக இருக்கவேண்டும். நமது தலைவர்களிடையே இன்றுநாம் காணமுடியாத தொன்ருக இருக்கும் இந்த ஐக்கியம் பொதுமக்கள் மத்தியிலாவது நின்று நிலவட்டும். எங்களுக்கு ஒரேயொரு அரசியற்கட்சிதான் உண்டு. 'தமிழ் மக்கள் கட்சி'யென்ற இந்தக்கட்சியின் பெயரால் யாவரும ஒற்றுமையைக் கடைப்பிடிப்போம்."

**திரு. எஸ். ஸ்ரீநிவாசன்,**
வலிகாமங்கிழக்குக் காரியாதிகாரி.

## சிகறெற் புகையிலைச் செய்கை

"யாழ்ப்பாண இளைஞர்களின எதிர்காலம கமத்தொழிலிலும், கைத்தொழிலிலுமே தங்கியிருக்கிறது. மலையாளப்புகையிலைக்கு நல்ல வருங்காலம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, சிகறெற்புகையிலைச் செய்கையில் சிரத்தையெடுத்தல் நலம். கமத்தொழிலையே இளைஞர்கள் நம்பியிருக்கவேண்டியநிலை வந்துவிட்டது. அதனல், இளைஞர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்."

**திரு. வி. நடராஜா,**
கூட்டுறவுஅபிவிருத்தி உதவிக்கம்மிஷனர்.

## பாராட்டுவதில்லையாம்

"எவரும் எனது யோசனைகளைப் பாராட்டுவதில்லை நான் இந்தநாட்டுக்குச்செய்யும் சிறந்த சாதனைகளையெல்லாம இங்குள்ளபத்திரிகைகள் குணதோஷங்கூறி வன்மையாகக் கண்டிக்கின்றன. தாங்கள் விரும்பாதஒருவர் எத்தகைய நல்லயோசனை கூறியபோதிலும் அதைப்பற்றிக் குறைகூறுவதும், கண்டிப்பதும் இலங்கையிலே மக்களின்வழக்கமாக இருந்துவருகின்றன."

**கல்விமந்திரி தஹநாயகா**

## உருக்குலைந்த கல்விமுறைகள்

"இந்நாட்டுமக்கள்மீதும, ஆசிரியர்கள்மீதும் பற்றுதல்இருந்தால் உடனேதானே கல்விமந்திரி இராசிநாமாச் செய்யவேண்டும். திரு. தஹநாயகா கல்விமந்திரியானபின் பத்திரிகைகளுக்குச் செய்திகொடுக்கும் வேலையாக இருக்கிருரேதவிர மக்கள்நலனுக்காக அவர் வேலைசெய்யவில்லை. ஒருநாட்டில் மந்திரியாகஇருப்பவர் எல்லா இனத்தவர்களையும் ஒரேகண்ணல் பார்க்கவேண்டும். ஆனல், கல்விமந்திரியோ சிங்களவர், தமிழரென்ற துவேஷங்கொண்ட ஓர் வகுப்புவாதியாக இருக்கிருர். இத்தகையவகுப்புவாதியை நாமமந்திரியாக எப்படி ஏற்கமுடியும்? அத்துடன் இவர் கல்விமந்திரியானபின் எலலாப்பாடமுறைகளையும் உருக்குலைத்துவிட்டார். இனி அதைச சீர்திருத்தக் குறைந்தது 25 வருடங்களாவது செல்லும்."

**திரு. கே. வனசிங்கம்,**
மத்தியமாகாணத் தமிழாசிரியர்சங்க காரியதரிசி.

## சுகாதாரமந்திரிக்குச் சவால்

"ஆயுர்வேத பிரச்சினைமீது மீரிகமத் தொகுதியில் மீண்டும் ஓர்தேர்தலில் போட்டியிடுமாறு சுகாதாரமந்திரி விமலா விஜயவர்த்தனவுக்கு நான் சவால்விடுக்கிறேன். நானும மீரிசமத் தொகுதியைச சேர்ந்தவள். அங்குள்ளவாக்காளர்களில் பெருந்தொகையினர் திருமதி விமலாவைப் பாராளுமன்றஅங்கத்தவராகத் தாங்கள் தெரிவு செய்ததையிட்டு இப்பொழுது பெருமளவில் விசனப்படுகின்றனர் என்பது எனக்குத் தெரியும்."

**செல்வி ஜே. பி. வீரக்கொடி,**
ஆயுர்வேத வைத்தியகல்லூரி மாணவி.

## பிரதமருக்கு வாழ்த்து

"இலங்கைப்பிரதமர் பண்டாரநாயகா நீடூழிவாழவேண்டும். இவரின் உதவியாலேயே சிதைந்துகிடந்த தமிழ்ச்சமூகம் இன்று ஒன்றுபட்டுள்ளது. இத்தகையமகானுபாவரை நாம் எந்நாளும் மறக்கமுடியாது இவரின் அரியசேவையாலேயே தமிழர்கள் விழிப்புணர்ச்சிஅடைந்தார்கள். இன்றேல் இன்னும தூங்கியநிலையிலேயே இருப்பார்கள். ஆகையால், அவரை நாம் பாராட்டவேண்டும."

**திரு. ஆர். டி. சண்முகதாசன்,**
அ. இ. தமிழாசிரியர்சங்க காரியதரிசி.

## தகுதி உள்ளவர் அல்ல

"மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கம் தனதுகீர்த்தியையும், மக்களின் நல்லெண்ணத்தையும் இழக்காதிருக்க வேண்டுமானல் சுகாதாரமந்திரி விமலா விஜயவர்த்தன உடனேதானே இராசிநாமாச் செய்யவேண்டும், அல்லது அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும். திருமதி விமலா விஜயவர்த்தனவின் சர்வாதிகாரப்போக்கும், தீங்குகள்விளைக்கும் தன்மையும், நடவடிக்கையும் அரசாங்கத்தின் ஜனநாயககொள்கைக்கு நேர்மையானவை அல்ல. ஆகவே, அவர் மக்கள்ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் ஓர்மந்திரி பதவிவகிக்கத் தகுதிஉள்ளவர்அல்ல."

**திரு. ஆர். டி. பண்டா,**
சப்பிரகாமமாகாண ஆயுர்வேதசங்கத்தின் காரியதரிசி.

## ஒரேமுகமாக நடத்தவேண்டும்

"யு. என். பி. அரசாங்கந்தான் மலைநாட்டுத்தமிழர்களுக்குத் தீங்கிழைத்தது என்றபோதிலும் இந்த எம். ஈ. பி. அரசாங்கமும் தோட்டப் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பணிஸ்கூடக்கொடுக்காது யு. என். பி. யைவிட ஒருபடி முன்னேறிவிட்டது ஒருநாட்டின் மக்கள் எந்தச்சாதியினராக இருந்தபோதிலும அரசாங்கம் அவர்களை ஒரே முகமாக நடத்த வேண்டுமேயன்றித் துவேஷமனப்பான்மையுடன் நடத்தக்கூடாது. பொறுமைக்கும் ஒருஎல்லை உண்டு. இவர்கள்செய்த தீங்குகளையெல்லாம் நாம் பொறுத்ததுபோதும். இனிநாம் பொங்கியெழவேண்டியது அவசியமாகும். இந்நாட்டுத் தேசிய செல்வத்தின வளர்ச்சியிலே அக்கறையுள்ளமக்களுக்கு இத்தகைய தீங்குகளைவிளைப்பது மனிதத்தன்மையாகாது"

**திரு. எஸ். தொண்டமான்,**
இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் முன்னைநாட் தலைவர்.

## பதவியை இராசிநாமாச் செய்க

"வர்த்தகமந்திரி ஆர். ஜி. சேனநாயகா தம்பதேனியாத் தொகுதியை விரும்பாவிடில் அவர் கௌரவமுள்ள ஓர்கனவானைப்போன்று இத்தொகுதியின் பிரதிநிதிபதவியை இராசிநாமாச் செய்துவிடவேண்டும. அதனல், தம்பதேனியாத் தொகுதிமக்கள் தங்களுக்குத் தகுதியான ஒருபிரதிநிதியைத் தெரிவுசெய்யக்கூடிய சந்தர்ப்பம கிடைக்கக்கூடியதாகும்"

**திரு. டபிள்யு. எம். ஜி. பண்டா,**
தம்பதேனியா.

## சிங்களவருக்கே மீண்டும்

"சிலமுக்கியமான அரசாங்கபதவிகளையும், மந்திரிபதவிகளையும் குறிப்பிட்ட சிலதமிழர்களுக்குக் கொடுப்பதே யு. என். பி. கட்சியின் திட்டமிடப்பட்ட கொள்கையாக இருந்து வந்தது. சுயநல நோக்கங்களுடன் யு. என். பி. இவ்வாறுசெய்தது. நாங்கள் இதையெல்லாம் பூரணமாகமாற்றிச் சிங்களவருக்கே அவர்களுடைய சட்டரீதியானஉரிமைகளை மீண்டும் அளித்திருக்கிறோம்."

**திரு. எம். பி. டி சொய்சா,**
உதவித் தொழில்மந்திரி.

## சிங்களச் சிறிசேனுக்கள்

"திரு. செல்வநாயகம் போன்ற தமிழ்த்தலைவர்கள்நடத்தும் ஸ்ரீஎதிர்ப்பு இயக்கத்திற்குத் திரு. டட்லி சேனநாயகாபோன்றவர்களும் ஆதரவளிப்பது வருந்தத்தக்கதாகும். இலங்கையில் இரண்டு புத்தஆசிரியபயிற்சிக் கல்லூரிகளேஉண்டு. கத்தோலிக்கருக்கும, தமிழருக்கும் பலவுண்டு. தமிழர் இதுவரை முன்னேறியுள்ளனர். விஞ்ஞானப்பகுதியில் அவர்களே அதிகபயிற்சி பெற்றுள்ளனர். அதனல் தான் அதிகமான 'சின்னையா'க்களையும், 'தம்பையா'க்களையும் நாம்காண்கிறோம். சிங்களச்சிறிசேனுக்களுக்கு இடமேயில்லை. தமிழர்இன்று தம்முள் ஒத்துழைக்கின்றனர். அதனல் சிங்களத்தை ஒருபாடமாகக் கற்பிப்பதே கஷ்டமாகிவிட்டது.

**திரு. டபிள்யு. தஹநாயகா,**
கல்விமந்திரி.

# சுதேச வர்த்தமானம்

## அர்ச் சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாண, சென் வினசென்ற் டீபோலசபை அர்ச். சூசையப்பர்பந்தியின் வருடாந்தபொதுக்கூட்டம் இம மாசம் 24-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்குச் சென் சாள்ஸ்பாடசாலை மண்டபத்திலே ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. ஜே. எம குசரேுன் சுவாமியவர்கள்தலைமையில நடந்தேறும. அதிலே வண ஜே. ஏ. பிரான்சிஸ்சுவாமியவர்களும், ஆசிரியர் பி. அமிர்தநாயகம் அவர்களும சொற்பொழிவாற்றுவார்கள். பந்தியின் அபிமானிகளும், உபகாரிகளும அதற்குச் சமுகமாகும்படியாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள்.

## பாப்பரசரின் புதியஸ்தானிகர்

மகாமேன்மைதங்கிய மாட்டீன் லூக்காஸ் அதிமேற்றிராணியார் தொடர்ந்து சுகமீனப்பீடித்துள்ள கோய்காரணமாகத் தமது பதவியைச் சென்றவாரம் இராசிநாமாச்செய்தமையாலே அவரிடமாக இந்தியாவின் புதிய அப்போஸ்தலிக்க ஸ்தானிகராக மகாமேன்மை தங்கிய ஜேமஸ் றெபேட் நொக்ஸ் அதிமேற்றிராணியாரை நியமனஞ் செய்திருக்கிறுரெனச செய்திகிடைத்திருக்கிறது.

## சிங்கள தபால்முத்திரைகள்

சிங்களத்தில் அச்சிடப்பட்ட தபால் முத்திரைகளை உபயோகிக்கும்விஷயமாய் ஆராய்ந்து அறிக்கையிடுமாறு தபால்-வானெலிமந்திரி தபாற்பகுதித் தலைவரைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இப்போதுபாவனையிலிருந்துவரும் தபால்முத்திரைகளில் ஆங்கிலஎழுத்துகள் இருந்துவருகின்ற முக்கியமானஇடத்தைச் சிங்களஎழுத்துகளுக்கு அளிக்கவேண்டுமென்பதே மந்திரியின் விருப்பமாம்.

## 'ஜாவ்ன'வுக்குப் பதில்

ஆங்கிலத்திலே 'ஜாவ்ன' என்றும், தமிழிலே யாழ்ப்பாணமஎன்றும் வழங்குகின்றபெயரை ஆங்கிலத்திலுமே 'யாழ்ப்பாணம்' என்று வழங்கவேண்டுமென நகர்கள், கிராமங்களின்பெயர்களை மாற்றியமைப்பதுபற்றி ஆலோசனைகூறும்படியாய் அரசாங்கத்தால்நியமிக்கப்பட்ட கம்மிற்றி சிபாரிசுசெய்திருக்கின்றது. ஜாவ்னவை யாழ்ப்பாணமென மாற்றவேண்டுமென்று யாழ்ப்பாணநகரசபை ஏற்கனவே கேட்டிருந்தது.

## மாருதப்புரவியின் கோளாறு

பண்ணைக்கடற்பாதை ஆயச்சேவையில் ஓடித்திரியும் மாருதப்புரவிஎன்ற யந்திரப்படகுப்பாதை மீண்டும் பழுதடைந்தமையால் பிரயாணிகள்பெருங்கஷ்டம் அனுபவிக்கிறார்கள். யாழ்ப்பாணத்துக்கும், தீவுபகுதிக்குமிடையே பிரயாணசேவைக்கென முந்திய அரசாங்கத்தின் காலத்திலே ஒருலட்சம்ரூபாவுக்குமேல் விலைகொடுத்து வாங்கப்பட்ட இந்தப்படகு காலத்துக்குக்காலம் யந்திரக்கோளாறுண்டு நின்றுவிடுவதால் நாளொன்றுக்குப்பண்ணைக்கடற்பாதை வழியாகப் பிரயாணஞ்செய்கின்ற சுமார் ஐயாயிரம் மக்களுக்கும் பெருங்கஷ்டம் ஏற்படுவது ஆச்சரியமல்ல.

## மந்திரிமுன்னரே கண்டனம்

"நெற்காணிச்சட்டத்தைக் கண்டிப்பவர்களை அங்கொடைப் பைத்தியகாரவிடுதிக்கு அனுப்புவதற்குமுன் கம்பஹாமக்கள் இந்தச்சட்டத்தைத் தயாரித்தவர்களைப் பைத்தியகாரஆஸ்பத்திரிக்கு அனுப்புவார்கள்" என்று உணவு-கமத்தொழில் மந்திரி பிலிப் குணவர்த்தன தலைமையிலே சென்ற 18-ந்திகதி யக்கலையில்நடைபெற்ற கூட்டமஒன்றிலே திரு. பி. பி. விக்கிரம ஆராய்ச்சி கூறியிருக்கின்றுர். ஆனல், மந்திரியோ இந்தச்சட்டத்தைப்பற்றி அறியாமையாலேயே மக்கள் அதனை எதிர்க்கிறுர்களென்றும், இன்னும் நான்கு வாரகாலத்தில் அச்சட்டம் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்படுமென்றும் கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பிருங்கோவுக்குச் சன்மானம்

ஆஸ்திரியாவிலே மரியாசெல் எனுமிடத்திலுள்ள கீர்த்திவாய்ந்த ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாச ஆச்சிரமமானது "கத்தோலிக்கஸ்பெயினுக்கும், கத்தோலிக்க ஆஸ்திரியாவுக்குமிடையே நிலவுகின்ற ஆழ்ந்த சிநேகபான்மையின் ஓர்சின்னமாக" ஸ்பானிய அரசாங்கதலைவரான ஜெனறல் பிருங்கோ அவர்களுக்குத் தங்கவிருதுஒன்றைச் சன்மானித்திருக்கின்றது. "ஆஸ்திரியாவின் பெரியநண்பரும், ஐரோப்பிய சுதந்திரங்களின் மகிமைவாய்ந்த காவலருமானவருக்கு" என்று இந்தவிருதிலே பொறிக்கப்பட்டிருக்கிறது. இதனைப்போலும் மற்ருேர்தங்கவிருது ஹங்கேரிய தேச கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவருக்கெனச் சித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

### காப்பிரி மேற்றிராணிமார்கள்

பிரான்சிய மேற்காபிரிக்காவிலே கோற்ருேனு அதிமேற்றிராசனத்தின் துணைமேற்றிராணியாராக அதிவண. பேர்ணுட் கன்ரின் சுவாமியார் சமீபத்தில் அபிஷேகஞ்செய்யப் பெற்றதோடு தற்போது ஆபிரிக்காவிலே லத்தீன் ரீதியான நீகிருே—அதாவது காப்பிரி மேற்றிராணிமார்களின் தொகை பதினேழாகியிருக்கிறது. இவர்களில் 16 பேரும் பிறப்பிலேயே ஆபிரிக்கராவர். ஒருவர் மேற்குநாடுஒன்றில் பிறந்தவர். இவர் பிரித்தானிய மேற்கிந்திய தீவுகளிலே டோமினிக்காவுக்குச் சமீபமான மகோற்ருஎன்ற சிறிய தீவில் பிறந்த யோசெவ் பவேர்ஸ் மேற்றிராணியார். 17 மேற்றிராணிமாருள்ளும் ஆறுபேர் 1956-ம் ஆண்டில் நியமனஞ்செய்யப்பெற்ருர்கள். எல்லோருள்ளும் முதலாவதானவர் 1939-ம் ஆண்டு வைகாசிமாதம் 25-ந் திகதி நியமனஞ்செய்யப்பெற்ற மறாக்காவின் மேற்றிராணியாரான கிவானுகா ஆண்டவரே.

### வத்திக்கானும் பிரித்தானியஅரசும்

லண்டன்நகரிலே இராசிய தூதர் ஒருவரை நியமிக்குமாறு பரிசுத்தஸ்தானத்தைக் கேட்டுக்கொள்ளும்விஷயத்தைப் பிரித்தானியஅரசாங்கம் சமீபத்திலே திரும்பவும் பரிசீலனைசெய்யவிருக்கிறதெனச் செய்திகிடைத்திருக்கிறது. பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற பிரித்தானியபிரதிநிதி பூரண இராசிய கௌரவத்தையும், விசேஷ உரிமைகளையும் கொண்டிருந்தபோதிலும் பிரித்தானிய அரசினிடமாகத் தனதுபிரதிநிதிஒருவரைப் பரிசுத்தஸ்தானம் இன்னுமே கொண்டில்லை. பிரித்தானிய வெளிநாட்டு மந்திரியான திரு. செல்வின் லொயிட்அவர்கள் சமீபத்திலே ரோமைநகருக்கு விஜயஞ்செய்திருந்தபோது, தாமாகவே இவ்விஷயம்பற்றித் தெரிவிக்கலாயினர். ஆனல், இவர் அங்கு தங்கியிருந்தபோது இது விஷயமாய் யாதும் விவாதிக்கவில்லை. அநேக வருடங்களாகப் பிரித்தானியஅரசாங்கம் பரிசுத்தஸ்தானத்தினிடமாக ஓர்பிரதிநிதியைக் கொண்டிருந்தபோதிலும் அவருக்குப்பதில் ஓர் பிரதிநிதியைப் பரிசுத்தஸ்தானம் கொண்டிராமை ஓர் விபரீதமாகவே இருந்துவருகிறது.

### புருெட்டஸ்தாந்தருக்குப் புகழுரை

ஜேர்மனியிலே கம்யூனிஸ்த கிழக்குப்பேர்ளின்நகரில் கம்யூனிஸத்தைஎதிர்த்துப் போராடிவரும் கத்தோலிக்கருடன்சேர்ந்து திடசித்தமாயும், ஐக்கியமாயும் இருந்துவருகின்ற புருெட்டஸ்தாந்தர்களைச் சமயத்திலே வத்திக்கான்வானெலி புகழ்ந்து பாராட்டியிருக்கிறது. "பிரிந்துபோன நமதுசகோதரர்கள் தற்சமையம் கடுஞ்சோதனைகளுக்குள்ளாய்க் கஷ்டப்படுகின்ருர்கள்; கம்யூனிஸ்த செங்கடலிலே தனிக்கவிடப்பட்டுத் தவிக்கின்ற கிழக்குப்பேர்ளினையும், அந்நகர் வாசிகளையும் எமதுசெபங்களில் நினைவுகூருவோம்" என்றும் வானெலி தெரிவிக்கலாயிற்று. கிழக்குஜேர்மனியை ஆட்சிசெய்துவரும் கம்யூனிஸ்தர்கள் அங்குள்ள புருெட்டஸ்தாந்த சபைக்குப் புதுமாதிரியான வருமானவரிஒன்றுவிதித்து அதன் மூலம் ஏறக்குறைய எட்டுலட்சம் பவுண் பலவந்தமாக அறவிட்டிருக்கின்ருர்கள். அங்குள்ள புருெட்டஸ்தாந்தர்கள் அனைவரையுமே இது பாதித்ததொன்ருகும். பொருளாதார நெருக்கடி காரணமாகக் கிழக்குஜேர்மனியிலுள்ள புருெட்டஸ்தாந்த, கத்தோலிக்கஆஸ்பத்திரிகளும், கலாசாலைகளும் மூடப்பட்டுள்ளன. கிழக்குஜேர்மனியில் புருெட்டஸ்தாந்தர்களே மிகப்பெரும்பான்மையினர்கள்.

### பாப்பரசரின் கோவேறுகழுதை

மிருகங்களின் பாதுகாவலராகும் வனவாசியான அர்ச். அந்தோனியாரின் திருநாளாகிய சென்றதைமாதம் 17-ந் திகதியன்று அவர்பேரால் மிருகங்களை ஆசீர்வதிக்கும் திருச்சடங்குக்குப் பாப்பரசருமே தமது வெள்ளைக் கோவேறுகழுதையை அனுப்பிவைத்தார். அவைகளை இவ்விதம் ஆசீர்வதிப்பது ஓர் புராதன வழக்கமாகும். ஆனல், இது எப்போது ஆரம்பமானது, எப்படி ஆரம்பமானது என்பது அறியப்படாததாகும். ஆயினும், பாரம்பரியமாய் அறிகிறபடி, அர்ச். வனத்துஅந்தோனியார் சிறிய கிராமக்கோவில்ஒன்றிலே பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தபோது அதைக் கேட்டுக்கொண்டிருந்த சனங்கள் . விளக்கமுடியாத ஓர் நியாயத்தையிட்டு ஒருவர்பின்னெருவராகக் கோவிலைவிட்டு வெளியேறினுர்கள். கடைசியாக அவர் கோவிலில்ஒருவருமேயில்லாது தனிமையாக விடப்பட்டபோது ஓர்பன்றியும், மற்றுஞ்சில மிருகங்களும் வழிதவறி அக்கோவிலுட்போய்ச் சேர்ந்தன. இந்த அர்ச்சியசிட்டரின் சித்திரப் படங்களிலே பலகாலும் அவரின் பக்கமாக ஓர்பன்றி நிற்கக் காணப்படுகின்றது. இன்னும் அவருடையகரத்திலே ஒருசிறிய மணி காட்சியளிக்கிறது. மிருகங்களைஅழைக்க இவர்அதனை உபயோகித்தாரெனச் சொல்லப்படுகிறது.

### தாய்லாந்தும் கத்தோலிக்கரும்

தாய்லாந்தென அறியப்படுகின்ற சியதேசத்தில் 1,00,494 கத்தோலிக்கர் இருக்கின்ருர்கள். இவர்களை விசாரணைசெய்துவருகின்ற 210 குருமாருள் 84 பேர் ஆசியாக்காரரே. இவர்களிலும் வியெற்ணுமியர் ஒருவர் நீங்கலாக ஏனையோரெல்லாம் சியசாதியினரே. எஞ்சிய 126 குருமாருள்ளும் பிரான்சியர் 63 பேரும், இத்தாலியர் 40 பேரும், அமெரிக்கர் 15 பேரும் அடங்குவார்கள். அங்கு இராஜபாரி எனுமிடத்திலுள்ள பிரதம குருமடத்தில் 60 குருத்துவமாணவர்கள் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்ருர்கள். ஏனைய நான்குசின்னக் குருமடங்களிலும் 87 குருத்துவ மாணவர்கள் கல்விபயின்றுவருகின்ருர்கள்.

### ரூஷியமக்களின் வேதவிசுவாசம்

"வெளித்தோற்றம்அதிககுரூரத்தனமும், மனுத்தன்மையற்றதுமாய்க் காணப்பட்டபோதிலும் நிலைமைகள் அதிகம் சாதகமாகிக்கொண்டு வருகின்றனஎன்று ரூஷிய இரும்புத்திரைக்குப் பின்னலிருந்து பிரத்தியேகமாக நமக்குக்கிடைத்துள்ள அறிக்கைகள் தெரிவிக்கின்றன; இரும்புத்திரைக்குப் பின்னலுள்ளமக்கள் பயங்கரமான நிலைமைகளின்கீழ் செபித்துக்கொண்டும், உபத்திரவப்பட்டுக்கொண்டும் இருக்கிருர்கள்; உலக சமாதானத்துக்குத் திறவுகோலான ரூஷியாவின் மனந்திரும்புதல் முன்னெப்போதாவது இருந்ததைக்காட்டிலும் அதிகஞ்சமீபத்தில் இருக்கின்றது" என்று கீழைத்தேசங்களின் திருச்சபைத் திருச்சங்ககாரியதரிசியான கருதினல் திசருன் ஆண்டவர் கூறுகின்ருர். "கிராமவாசிகளான ரூஷியமக்கள் கொண்டுள்ள கிறீஸ்துவேதவிசுவாசத்தை அடக்கியொழிக்க முடியாது; கம்யூனிஸம் குழிதோண்டிப் புதைக்கப்படுவதைக்காண ரூஷியகிராமமக்கள் அங்குசீவந்தராய் இருப்பார்கள்; அவர்களின் உறுதியான விசுவாசத்தை அசைத்துப் பெயர்த்துவிடுமாறு பிரசாரமூலமும், பலாத்காரமூலமும் செய்யப்பட்டுவந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை" என்று 1953-ம் ஆண்டுமுதல் 1955-ம் ஆண்டுவரை மஸ்கோநகரிலுள்ள அமெரிக்க ஸ்தானீகராலயத்தில் விசாரணைக்குரவராய் இருந்துவந்த வண. ஜோர்ஜெஸ் பிசோனெற்றிசுவாமியார் சமீபத்திலே நியூயோக்நகரில் பேசியபோது தெரிவித்திருக்கின்ருர்.

### வத்திக்கானும் புராதனநாணயங்களும்

வத்திக்கான் சென்றவருடத்திலே ஆயிரத்துக்குமேற்பட்ட புராதனநாணயங்களையும், மெடல்களையும் மேலதிகமாகச் சேகரித்திருக்கின்றது. அதனல் வத்திக்கானின் நாணய—மெடல் சேகரிப்பானது உலகில் அதிகம்சிறந்தனவற்றில்ஒன்ருய் விளங்குகின்றது. சென்றவருடம் சம்பாதிக்கப்பெற்ற 1,084 நாணயங்கள், மெடல்களிலே ஐந்தாவது நிக்கலஸ்பாப்பானவரின் ஆட்சிகாலத்திலே அடிக்கப்பட்டுப் பொலொஞ்ஞாநகருக்குப் பிரதிநிதியாயிருந்த கருதினல்பெசாறியோனின் சின்னத்தைத்தாங்கியனவாய் உலகில் இருந்துவந்த இரண்டேயிரண்டு தங்கநாணயங்களில் ஒன்றும்அடங்கும். அபூர்வமான ஏனையவற்றில் 9-ம் பத்திநாத பாப்பானவரின் ஆளுகைகாலத்தைச்சேர்ந்த ஓர் தங்கநாணயமும், 2-வது ஜூலியஸ் பாப்பானவரின் காலத்தைச் சேர்ந்த ஓர் தங்கநாணயமும், 8-வது ஊர்பான் பாப்பானவர் காலத்தைச்சேர்ந்த ஓர் வெள்ளி நாணயமும் அடங்கியுள்ளன. சென்றவருடம் கி. மு.. நூரும் ஆண்டில் பாவனையிலிருந்த ரோமைக்குடியரசுக்குரிய 600 நாணயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்விதம் கடந்த 150 வருடங்களாகச் சேகரிக்கப்பட்டனவாய்ச் சுமார் 1,20,000 புராதனநாணயங்களும், மெடல்களும் வத்திக்கானில் தற்போது இருந்துவருகின்றன. இவற்றில் அநேகம் உலகில் மிகஅபூர்வமானவையாகும்.

---

● நிகழும் நூற்ருண்டில் தோன்றிய வால்நட்சத்திரங்களில் அதிகம்பிரகாசமான ஒருவால்நட்சத்திரம் வருகிற சித்திரைமாதக் கடைசிவரையிலே தோற்றுமென்று வால்நட்சத்திரங்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்த திரு. சாள்ஸ்மோறிஸ்என்பவர் ஜொகானெஸ்பேர்க் நகரிலே சென்ற 10-ந்திகதி தெரிவித்திருக்கின்ருர். இதற்குமுன் நான்கு வால்நட்சத்திரங்கள் தோன்றியபோதெல்லாம் முன் கூட்டியே அவைகளைப்பற்றி இவர் அறிவித்திருந்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிமாதம்

**பொதுக்கருத்து :** குருத்துவஅழைத்தலை விருத்திசெய்யும் ஸ்தாபனங்களுக்கு விசுவாசிகள் உதவிசெய்யுமாறு வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து :** வடஆபிரிக்காவிலே திருச்சபை செயலாற்ற அமைதியானசூழ்நிலைஏற்படுமாறு மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
மாசி மாதம் 21-ந் திகதி

## அரசாங்க அதிபரின் அறிவுரை

“இலங்கை வருடந்தோறும் முட்டை இறக்குமதியில் முப்பதுலட்சம் ரூபாவும், கோழி, வெள்ளாடு இறக்குமதியில் முப்பதுலட்சம் ரூபாவும், செத்தல்மிளகாய் இறக்குமதியில் மூன்றுகோடி ரூபாவும் செலவிடுகின்றது. இந்தத்தொகை உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். ஆனால், இது உண்மை. இந்தச்செலவைத் தவிர்த்துக்கொள்ளலாமென்று யாழ்ப்பாணத்தில் எனது அனுபவம் ஒருவரைநம்பச்செய்கிறது. இங்கே கிராமங்களில்வாழும் ஒவ்வோர் குடும்பமும் இரு வெள்ளாடுகளும், ஐந்து பேட்டுக்கோழிகளும் வளர்த்து வருவதோடு நூறு மிளகாய்ச்செடிகளும் பயிரிட்டுவந்தால் இந்த உணவுப்பொருட்களுக்கு நாம் வெளிநாடுகளை நம்பியிருக்கத்தேவையில்லை. இதுதான் எனது தாரகமந்திரம். இதனை என்னால் இயன்றமட்டும் போதித்துவருகிறேன். குறிப்பாக இந்நாட்டின் படித்தஇளைஞர்களுக்கே இதைப் போதிக்கிறேன். இதற்கென்று இளைஞர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துச் செயலாற்றினால் நல்லபணம் சம்பாதித்துக் கொள்ளலாம். இந்நாடு தனது அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்குத் தூரநாடுகளை நம்பியிருக்க வேண்டிய ஒருநிலைஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது. கமத்தொழில், கைத்தொழில் அபிவிர்த்தித் திட்டத்தின்மூலம் இந்நாட்டின் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளலாம். அத்துடன் ஒவ்வொருகிராமமும் தனது உணவுவிஷயமாகச் சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்ளலாம்” என்று நமது அரசாங்கஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தாஅவர்கள் அன்று ஓர்கூட்டத்தில் அபிமானம்பொங்கப் பேசியிருக்கின்றார்.

“நாளொன்றுக்குமூன்றுவேளை அரிசிச்சாதம் அருந்துகின்ற தமிழ்வழக்கம் ஒழிக்கப்படவேண்டும். அதற்குப்பதில் தானியவகைகளை உண்ணப்பழகித் தினமும் ஒருவேளைமாத்திரம் அரிசிச்சாதமும், கறியும் அருந்திவருமாறு தமிழ்மக்களை நான்கேட்டுக்கொள்ளுகிறேன். வடபகுதியின் எதிர்காலம் கமத்தொழிலிலேயே முற்றும்தங்கியிருக்கிறது. இதுவிஷயமாய் இளைஞர்கள் முதன்மைதாங்கிக் கமத்தொழிலில் புதியமுறைகளைப்புகுத்தி இவ்விதம் நாட்டின் பொற்காலத்துக்கான வழியைச்சித்தஞ்செய்யுமாறு அவர்களைவேண்டுகின்றேன். தங்கள்நாட்டில் உண்மையான பற்றுள்ளவர்கள் உள்நாட்டிலேயே நெசவுசெய்யப்பட்டஉடைகளையும், மற்றும்சுவதேசியப்பொருட்களையுமே தரிக்கவேண்டும். இவ்விதம் செய்வதானது ஸ்திரமானபொருளாதாரத்தை நிச்சயப்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்துவைப்பதாகும்” என்று அரசாங்க அதிபரே மற்றோர் கூட்டத்தில் பேசியிருக்கின்றார்.

தமிழ்மொழிக்கு இருந்துவந்த சமஅந்தஸ்தானது தனிச்சிங்கள சட்டத்தாலே பறிக்கப்பட்டு, அதன்விளைவாகப் பொருளாதாரம், அரசாங்க உத்தியோகமுதலாம் பலவற்றிலும் தங்களுக்கும், தங்கள்சந்ததியாருக்கும் ஏற்படப்போகும் — ஏற்படத் தொடங்கியிருக்கும் பல்வேறு கஷ்டநஷ்டங்களைநினைந்து கவலையுற்றுத் தமிழ்மக்கள் கலங்கிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே அனுதாபசிந்தையும், அனுபவ ஞானமும், அமைதியான போக்கும், அறிவாற்றலும்வாய்ந்த தமிழ்மகன் ஒருவர் அரசாங்கதலைவராக நமக்குக்கிடைத்திருப்பது ஓர் நல்லதிர்ஷ்டமேஎனலாம். எதிர்காலத்திலே எமதுமக்களின் பொருளாதாரவளம் குன்றாதிருக்குமாறு அவர் தம்மால் இயன்றதெல்லாம் அயராமுயற்சியுடன் செய்துவரக் காண்பது ஆனந்தமே. அரசியற்பிரச்சினை, மொழிப்பிரச்சினை ஆதியவைகளை அரசியற்தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, நமது பொருளாதாரவளத்தைப் பெருக்குவதிலும், வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதிலும் அரசாங்க தலைவரும், மற்றும் சமூகத்தலைவர்களும் காட்டும்வழிதுறைகளைக் கடைப்பிடித்தொழுகுவோமானால் எதிர்காலத்திலே எமது வாழ்க்கை சுபீட்சமுடையதாகுமென்று நிச்சயமாயிருக்கலாம்.

## வட்டமேசை மகாநாடு

‘சிங்களம்மட்டும்’ சட்டம் நடைமுறைக்குவந்தபின் சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே — இல்லை, அரசாங்கத்துக்கும், தமிழ்மக்களுக்குமிடையே எழுந்துள்ள வேற்றுமைகளைப்போக்கிச் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் மீண்டும் நிலைநாட்டு முகமாகத் தமிழ்த்தலைவர்களுடன் விரைவிலே வட்டமேசை மகாநாடுகள்கூட்டி ஆலோசனை நடத்தப் பிரதமர்பண்டாரநாயகா தீர்மானித்துள்ளார். இந்த மகாநாடுகளிலே “தமிழ்மொழிக்கு நியாயமானஅந்தஸ்து வழங்குவது” என்ற சொற்றொடரின் விளக்கம்பற்றியும், தமிழ்ப்பேசும் மக்களின் அடிப்படைஉரிமைகள் பற்றியும் ஆலோசிக்கப்படுமாம். தமிழ்மக்கள் தங்கள் மொழியை நியாயமானமுறையில் உபயோகிப்பதற்கேற்ற ஒழுங்குகளை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டுமென்பதும், அங்ஙனம் அவர்கள் தங்கள்மொழியை உபயோகிப்பதற்கேற்ற ஓர் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அரங்கேற்றும் நோக்கத்துடன் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதும் தம்முடைய தீர்மானமென்று பிரதமர் கூறுகின்றார். நியாயமான முறைஎன்றால், ஏற்கனவேநடைபெற்றுள்ளபடி, பஸ்களிலும், கல்விமந்திரியின் கீழுள்ள காரியாலயங்கள் போன்றவற்றிலும், மலகூடங்களில்தானும் சிங்களத்திலேயே விபரங்கொடுத்துத் தமிழையும், அதனால் தமிழினத்தையும் ஒதுக்கும்முறையிலா என்றுதான் பிரதமரைக் கேட்கின்றோம்.

நாட்டில் வகுப்புவாதக் கலவரங்கள் ஏற்பட்டுவிடுமோ? அவ்விதம் ஏற்படுமிடத்து, ஐக்கிய தேசியக்கட்சியின் கை ஓங்கிவிடுமோ? என்ற அச்சத்தினால்தான் வகுப்புக் கலவரங்களைத் தவிர்க்க வட்டமேசை மகாநாட்டைக் கூட்டி, ஏதோசலுகைகள்செய்து தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தப் பிரதமர் திட்டமிட்டுள்ளாரோ? — ஆனால், தன்மானமுள்ள எந்தத் தமிழ்த் தலைவர்களோ, பிரமுகர்களோ ஆசைவார்த்தைகளை நம்பி மோசம்போய்விடக் கூடாது — தமிழ்மக்களுக்கு வேண்டியது சமஅந்தஸ்தைத் தவிர வேறெதுவுமேயன்று என்பதை ஏகோபித்தகுரலோடு வற்புறுத்தவேண்டும் — தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக எம். ஈ. பி. அரசாங்கத்தின் மனமாற்றம்நன்றுதான்; அதனால், மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு வட்டமேசைமகாநாட்டைக் கூட்டுவதற்குப் பிரதமர் தெரிவித்த யோசனை வரவேற்கத்தக்கதுதான்; ஆனால், இந்தமகாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தனிச்சிங்களசட்டத்தை ஏற்றுக்கொள்வது ஓர்நிபந்தனையாக இருக்கப்படாது — மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காகப் பிரதமர் கூட்டவிருக்கும் வட்டமேசைமகாநாடு தமிழுக்குச் சமஅந்தஸ்து அளிப்பதுபற்றியதொன்றாக இருந்தாலேதவிர மற்றப்படி அந்தமகாநாட்டில் தமிழ்த்தலைவர்கள் கலந்துகொள்ளப்படாது – என்பனவாக ஏற்கனவே அபிப்பிராயங்கள்பல தமிழ்ப்பிரமுகர்கள் பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தவேளை “தமிழரின் நியாயமான உபயோகம்” என்பதற்குச் சரியானவியாக்கியானம் கூறுவதிலே அரசாங்கத்துக்கு உதவிசெய்ய ஐக்கியபிக்குகள்பெரமுனையும் முன்வந்திருப்பது ஆச்சரியமல்ல. சிங்களம் அரசாங்க பாஷையாக ஆக்கப்படும்போது தமிழ்ப்பேசும்மக்களுக்குச் சில சலுகைகளும், வசதிகளும் செய்துகொடுக்கப்பட வேண்டுமென்று இந்தப்பிக்குகள் பெரமுனை ஆரம்பத்திலிருந்தே தெளிவாக எடுத்துக்காட்டி வந்திருக்கிறதாம். “தமிழின் நியாயமான உபயோகம்” என்பதற்குத் “தமிழர்ஒருவர் அரசாங்கத்துடன் தமிழில் கடிதப்போக்குவரத்து நடத்தினால் அவருக்குத் தமிழிலேயே பதில்அளிப்பதுதான்” என்பதே இந்தப்பிக்குகள்பெரமுனை எடுத்துக்கூறும் விளக்கம். மண்டலசபைகள் ஆக்கப்படும்போது வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலுமுள்ள தமிழர்கள் அச்சபைகளின் கருமங்களைத் தமிழிலேயேநடத்த அனுமதிக்கப்படுவதே அதுகொடுக்கும் சலுகையாம். ஆயினும், சிங்களமே நாட்டின் அரசாங்கபாஷை என்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் மீதே “தமிழின் நியாயமான உபயோக”த்தின்கீழ் தமிழருக்குச் சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று பிக்குகள்பெரமுனை வற்புறுத்தியிருக்கிறதாம்.

அவ்வாறாயின், “பிச்சைவேண்டாம்தாயே நாயைப்பிடி” என்றவாறாகத்தான் இந்தச்சலுகைகள் பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறதாம். ஆனால், திரு. ஜி. ஜி. அவர்கள் கூறியிருப்பதுபோல், தங்கள் பொன்போன்ற மொழியுரிமை பறிக்கப்பட்டு விட்டதையிட்டுத் தமிழ்மக்கள் கொண்டுள்ள உணர்ச்சியை — தேசிய வீறுகொண்டஉணர்ச்சியை உலோபத்தனமான சலுகைகளால் திருப்திப்படுத்திப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாமென்று பிரதமரும், அவரது நெருங்கியசகாக்களும் கருதினால், அத்தகைய முயற்சி தமிழ்மக்களுக்குத் திருப்தியளிக்கவே மாட்டாது. தமிழ்மொழிக்கும், தமிழ்மக்களுக்கும் சமஅந்தஸ்தின்றிச் சமரசம் ஏற்படவேமாட்டாது. தனிச்சிங்களசட்டமும், மண்டலசபைகளும் தமிழையும், தமிழ்ப்பேசும் இனத்தையும் ஒதுக்குவனவேயன்றி வேறொன்றுமல்ல. பொதுத்தேர்தலின்போது தான் அடைந்துகொண்ட வெற்றியின் உணர்ச்சிவேகத்தாலே மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கம் அவசரம்அவசரமாக நிறைவேற்றிய தனிச்சிங்கள சட்டத்தாலே தேரையைக்கௌவிய சாரையைப்போன்று அது திணறிக்கொண்டிருப்பது வருந்தத்தக்கதே.

---

**வழக்கறிஞர்:** (சாட்சியைப்பார்த்து) விபத்துநடைபெற்ற இடத்திலிருந்து 135 அடிதூரத்துக்கப்பால் நின்றதாக நீசொல்லுகிறாய்; அப்போ எவ்விதம்தெளிவாக அதைக்காணமுடியும்?

**சாட்சி:** காலையில் நித்திரைவிட்டு எழும்போது நான் சூரியனைக் காணக்கூடியதாய் இருக்கிறதே; இந்தச்சூரியன் 19 கோடியோ 30 லட்சம்மைல் தூரத்துக்கப்பால் இருக்கிறதென்று அவர்கள் சொல்லுகிறார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நிறைவு

யாழ்ப்பாண மேற்றிராணியாராகவும், இளைப்பாறியின் அசவாககரின் நாமமாத்திரையான மேற்றிராணியாராகவும் விளங்கியிருந்த மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்கள் பரமபதம்அடைந்த முதலாம்ஆண்டு நிறைவு ஞாபக தினம் இம்மாதம் 27-ந் திகதியாகிய வருகிற புதன்கிழமை வருகின்றதென்பதை அனைவர்க்கும் நினைவூட்டுகின்றோம். அன்றுதினம் காலை 6-30மணிக்கு ஆசனக்கோவிலிலே அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றுவார்.

## முதலாம்வருட மரணஞாபகம்



பிறப்பு: 14-10-1884 இறப்பு: 27-2-1956

## துக்கப் பாடற்பூசை

சென்றஆண்டு 27-2-56 திங்கட்கிழமை பரமபதஞ்சேர்ந்த எமது அன்புக்கும், வந்தனைக்குமுரிய ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இளவாலைப் பெரியகோவிலில் இம்மாதம் 27-ந் திகதி புதன்கிழமை ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறுமாதலால், அதற்குக் கூடுமானயாவரும் சமுகமாயிருந்து, ஆண்டவர் அவர்களின் ஆன்மசாந்திக்காக அதனைக்கண்டு ஒப்புக்கொடுத்து உருக்கமாக வேண்டிக்கொள்ளுமாறு மிக விநயமாகக் கேட்டுநிற்கின்றோம்.

சி. எஸ். நாயகம் தம்பதிகள்,
பத்தாவத்தை (இளவாலை)

---

கம்யூனிஸ்தர்களுடன் அரசியல் கூட்டுமுன்னணி அமைக்கும்யோசனையை இத்தாலிய சோஷலிஸ்தகட்சி நிராகரித்திருக்கிறது. இத்தாலிய சோஷலிஸ்தகட்சி மகாநாடு சென்ற 12-ந் திகதி வெனிஸ்நகரில் நிகழ்ந்தபோது அதில்பேசிய சிங்ஞோர் நெனி என்பார் போலாந்து, ஹங்கேரிபோன்ற நாடுகள் அநுபவித்தகஷ்டங்களுக்கும், அவற்றிற்குண்டான சோதனைகளுக்கும் உள்ளாகாமல் இத்தாலியைப் பாதுகாக்கச் சோஷலிஸ்தர்கள் உறுதிகொண்டிருப்பதாகத் தெரிவிக்கலாயினர்.

### அர்ச். பெரிய கிறகோரியாரின்
## நைற்பட்டம்

பேசாலையிலே பிரஸ்தாபம்பெற்ற கத்தோலிக்க பிரமுகராய், பெரிய கொடைவள்ளலாய், பலராலும் நன்கறியப்பெற்றவராய் விளங்கும் ஸ்ரீமான் J. V. பல்தானு, M. B. E, J. P., U. M. அவர்களின் வேததொண்டு, சமூகதொண்டு, தருமதொண்டுகளைப்பாராட்டிப் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பரசர் அர்ச். பெரிய கிறகோரியாரின் நைற்பட்டத்தை அவருக்குச் சன்மானித்திருக்கின்றார். நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் நிகழும் மாசிமாதம் 24-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பேசாலை, அர்ச். வெற்றிநாயகியின் ஆலயத்துக்கு எழுந்தருளி அன்றுபிற்பகல் 4 மணிவரையில் இந்நைற்பட்ட சன்மானத்துக்குரிய மகிமை விருதைச் செவாலியர் பல்தானு அவர்களுக்கு வழங்குவார். அதனைத் தொடர்ந்து புதியசெவாலியர்அவர்களுக்கு ஓர்வரவேற்புஉபசாரம் பரிமளிப்பாக நடந்தேறும். முந்திய திருவைபவத்திற்கும், மற்றும் உபசாரவைபவத்திற்கும் சமுகமளிக்குமாறு பேசாலைமக்கள்பேரால் அதன் பங்குக்குருவர் வண. எஸ். எஸ். வில்லவரசிங்கம் சுவாமியவர்கள் பிரமுகர்கள் பலருக்கும் அழைப்பிதழ்கள் விடுத்துள்ளார்கள்.

---

### புதுக்குரவர்
## தம் பழைய கல்லூரியில்

இந்தமாசித்திங்கள் 8-ம் நாள் எமது புனிதவளன் கல்லூரிக்கு மிகப்புனிதமான ஓர்நாள். அன்றுதான் இக்கல்லூரியின் முதலாவதுகுருப்பிரசாதியைப் பெருமையுடன்வரவேற்றபொன்னுள். சென்ற 4-2-57 திங்கட்கிழமை சுதந்திரதினமன்று யாழ்நகரில் மேற்றிராணியாண்டவரால் குருப்பட்டம் அருளப்பெற்றஇவர் மறுநாள் தமது முதற்பூசைப்பலியைத் தம்முடைய சொந்தஊராகிய வவுனியாவில் சகல ஆடம்பரவைபவங்களுடனும் ஒப்புக்கொடுத்தார்.

தேவராஜ்என்னும் நாமம்பூண்ட இவரைப் புனிதவளன்கல்லூரி 8-ந் திகதியன்று சகல வந்தனோபசாரங்களுடனும் வரவேற்றது. அன்றுகாலை மாணவர்களால் தேங்கப்பெற்று அலங்காரகோலமுற்றுத் துலங்கிய கல்லூரி மண்டபத்துக்குப் புதியகுரவர் கல்லூரித்தலைவர் வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லோஸ்சுவாமியவர்களால் அழைத்துவரப்பெற்றனர். ஆசிரியர்களும் மண்டபத்தைச் சிறப்பித்தனர்.

ஆரம்பமாக ஒரு பாலியமாணவன் அவருக்கு மலர்மாலை அணிந்தான். எல்லோரும் ஆசனங்களில்அமர்ந்ததும் கல்லூரித்தலைவர் புதியகுரவரை யாவருக்கும் அறிமுகஞ்செய்துவைத்து, கடந்த 50 ஆண்டுகளுக்குமேல் கல்வியின்முன்னேற்றத்திற்காக இக்கல்லூரி உழைத்துவந்ததின் பயனாக இன்று முதலாவது குருப்பிரசாதியைப் பெற்றமையைப் பாராட்டினர். மேலும் இந்தக்கல்லூரி எத்தனையோ பாராளுமன்றஅங்கத்தவர்களையும், பலமந்திரிகளையும், இன்னும் பல திறப்பட்ட பெரிய, சிறியஉத்தியோகஸ்தர்களையும் ஆக்கியிருந்தும் இன்னும் ஒருகுருப்பிரசாதியை இதுஆக்கவில்லையே என்ற கவலை இன்றுடன்நீங்கியதையிட்டுத் தாம்பெருமையடைவதாகக் கூறினர்.

தொடர்ந்து தலைமையாசிரியரும், மற்றும்பல கல்லூரி உதவியாசிரியர்களும் ஆங்கிலம், தமிழ், சிங்களம்முதலாம் பாஷைகளில் சொற்பொழிவுகள் ஆற்றினர்

அன்றுசாயந்தரம் நான்குமணியளவில் கல்லூரி அதிபரால் புதியகுரவருக்கு ஓர் தேநீர்விருந்து அளிக்கப்பட்டது. அவ்வேளை வண. கட்டளைக்குரவரும் அதில்பிரசன்னமாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. மறுநாட்காலை புதியகுரவரால் ஒப்புக்கொடுக்கப்பட்ட திவ்வியபூசைப்பலிக்குத்திரளான மாணவர்மாணவிகளும், பொதுமக்களும் சமுகந்தந்து அவருக்காக வேண்டிக்கொண்டார்கள்.

நிருபர்.

## சுதேச வர்த்தமானம்

### அரிசியும் சுயதேவையும்

அரிசியைப் பொறுத்தவரையிலே நாட்டின்சுயதேவையைப் பூர்த்திசெய்ய இன்னும் 25வருடம்பிடிக்குமென்று கமத்தொழிற்பகுதி உதவித்தலைவரான திரு. சாம் சில்வா சென்ற 17-ந்திகதியன்று கண்டியில்நடைபெற்ற கமத்தொழில்மத்தியசபைக்கூட்டத்திலே தெரிவித்திருக்கின்றார். நெற்செய்கையை உத்தரவாதவிலைத்திட்டம் ஒன்றுதான் உற்சாகப்படுத்தி வந்திருக்கிறது; இலங்கையிலே 1954-ம்ஆண்டில் 3கோடியே 10லட்சம்புசல் நெல் விளைந்தது; 1955-ம்ஆண்டில் அதன் விளைவு 5கோடியே 50லட்சம்புசலாக அதிகரித்தது; ஆயினும்நாட்டின்சுயதேவையைப்பூர்த்திசெய்ய இன்னும்25 வருடம்பிடிக்குமென்று அவர்கூறலாயினர்.

### காரியாதிகாரிகளின் இடமாற்றம்

நெடுந்தீவுக் காரியாதிகாரியாய் இருந்துவந்தவரான திரு. பி. எல். பற்றிக் அவர்கள் அடுத்துநிகழும் பங்குனி மாதம் 1-ந்திகதிதொடக்கம் புத்தளக் காரியாதிகாரியாக இடமாற்றஞ் செய்யப்பெற்றிருக்கின்றார் இவரிடமாக அக்கரைப்பற்றுக் காரியாதிகாரியான திரு. ஜே. டி ஆனல்ட் அவர்கள் நெடுந்தீவுக்காரியாதிகாரியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார்.

### சுவீப்புகளின் வருமானம்

1955-ம்ஆண்டின் பிற்பகுதியிலே தேசியஆஸ்பத்திரிசுவீப், கொழும்புத்திட்டசுவீப்பாகிய இருபெரியசுவீப்புகளும் ஆரம்பிக்கப்பட்டதுமுதல் இதுவரை அவற்றிலே வெற்றிபெற்றவர்கள் பரிசுகளாக 80லட்சம்ரூபா பெற்றிருக்கின்றார்கள். இருசுவீப்புகள்மூலமும் இதுவரை கிடைத்துள்ளபணம் 1கோடியே 60லட்சம்ரூபாவாகும். இதிலே ஆஸ்பத்திரிகளுக்கென்று தேசியஆஸ்பத்திரிசுவீப் 40,94,367ரூபாவும், கொழும்புப்பொருட்காட்சிக்கென்று கொழும்புத்திட்டசுவீப் 19 லட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளன. ஆஸ்பத்திரிசுவீப் இதுவரை 62,94,199ரூபா பரிசுத்தொகைகளாக அளித்துள்ளது. இந்தச்சுவீப்மூலம் எல்லாமாகச் சேர்ந்தபணம் 1,25,88,339ரூபா. கொழும்புத்திட்டசுவீப் இதுவரை 20 லட்சம்ரூபாவைப் பரிசுத்தொகைகளாக வழங்கியுள்ளது. இந்தச்சுவீப் மூலம் எல்லாமாகச் சேர்ந்தபணம் 40 லட்சம்ரூபாவாகும்.

### மின்சாரம்பற்றிய தகராறு

யாழ்ப்பாண நகரசபைக்கும், அரசாங்கமின்சாரப்பகுதிக்குமிடையே மின்சாரம் வழங்கும்விஷயமாய் இருந்துவந்ததகராறு சென்றபுதன்கிழமை காலை யாழ்ப்பாணமேயர் எஸ். எல். நவரத்தினம்அவர்களும், போக்குவரத்து மந்திரியும் நடத்திய பேச்சுவார்த்தைகளுடன் முடிவடையலாயிற்று. தாமதமின்றிச் சுன்னாகத்திலே புதியமத்திய மின்சாரநிலையத்தை அமைத்து தடைப்படாத மின்சாரத்தை யாழ்ப்பாணத்துக்குவழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கைஎடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்திருக்கின்றது. அவசியம்ஏற்பட்டால் உதவிமின்சாரநிலையங்களையும் அமைக்கஎண்ணியிருப்பதாக மின்சாரப்பகுதித்தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

### பகிஷ்கார வாரம்

தமிழர்களின் ஸ்ரீஎதிர்ப்புப் போராட்டத்தைஎதிர்த்துச் சிங்களஜாதிக சங்கம் நடவடிக்கைஎடுக்க முடிவுசெய்திருக்கிறது. முதல்நடவடிக்கையாகப் 'பகிஷ்கார' முயற்சிகளில் இறங்க அது தீர்மானித்துள்ளது. தமிழர்கள் சிங்களத்தை எதிர்ப்பதால் தமிழரின் தொழில்நிலையங்களையும், அவர்களின் பொருட்களையும் அது பகிஷ்கரிக்க எண்ணியிருக்கிறது. பகிஷ்காரவாரம் இம்மாதம் 25-ந்திகதி ஆரம்பமாகும். அவ்வாரத்தில் தமிழரின்கடைகள், சலூன்கள் முதலியவற்றிற்குச் சிங்களவர் செல்லக்கூடாதெனக் கேட்கப்படுவார்கள். தமிழ்டக்றர்மார், பிரக்கிராசிமார் ஆகியோரைப் பகிஷ்கரிக்கவும், தமிழ்உணவுகளைச் சாப்பிடாதுதவிர்க்கவும் சிங்களஜாதிகசங்கம் தனதுமகாநாட்டில் தீர்மானித்துள்ளது. இதுபோன்ற பகிஷ்காரவாரங்கள் பின்னரும்இடையிடையே அனுட்டிக்கப்படுமாம். 25-ந்திகதிவரை நாடெங்கும் இச்சங்கத்தவர்கள் சென்று பிரசாரகூட்டங்கள்நடத்துவார்கள். ஏற்கனவே துண்டுப்பிரசுரம்ஒன்றையும்அச்சிட்டுச் சிங்களவர்களிடையே இவர்கள் பரப்பியிருக்கிறார்கள். மொழிப்பிரச்சினை அரசியற்பிரச்சினை அல்லவென்றும், மக்கள்அனைவரினதும் பிரச்சினை என்ற நியாயத்தால் எல்லோரும் ஒன்றுபட்டுப் போராடவேண்டுமென்றும், நாட்டின் அமைதியைக்குலைக்க முயலும்தமிழரின் நடவடிக்கைகளை எதிர்க்கவேண்டுமென்றும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

### சீரியாவும் கம்யூனிஸமும்

மத்தியகிழக்கு நாடுகளில்ஒன்றான சீரியாவை ருஷியர்கள் ஏறக்குறையத் தங்களது பொம்மைநாடுகளில்ஒன்றாகச் செய்துவிட்டனரென்றும், ஆயினும் சீரியாவையும், மற்றும்அராபிய நாடுகளையும் சோவியத் ருஷியாவின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றிவைக்கக் காலம்கடந்துவிடவில்லையென்றும் அனுபவம்வாய்ந்த அராபிய அவதானிகள் அமெரிக்க இராசதந்திரிகளை எச்சரித்திருக்கிறார்கள். மத்தியகிழக்கு நாடுகளிலே அரசாங்கம்வரை கம்யூனிஸ்தர்களின்செல்வாக்குப் பரவியுள்ள ஒரே அராபியநாடு சீரியாவேயென்றும், சர்வதேசகம்யூனிஸ்த இயக்கத்தை எதிர்த்துச் சீரியஅரசாங்கம் நடவடிக்கைஎடுக்கக்கூடிய நிலைமையில் இல்லையென்றும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியம் இயற்றிய கத்தோலிக்கன்

**திருச்சி, புனிதவளன்கல்லூரியிலே கிறீஸ்துவமாணவர்களுக்கென நடத்தப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைப்போட்டியில் பரிசுபெற்ற கட்டுரை இதுவாகும். இதனைஎழுதியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், அக்கல்லூரியில் பயின்றுவருகிறவருமான செல்வன் எவ். ஜே. ஆர். அன்ரனி ஞானராசா அவர்கள்.**

தைரியநாதனைப்போல், திருத்தக்கதேவரைப்போல், பாரதியைப்போல் பார்தனிலேயாரும் பிறந்ததில்லை என்றவாக்கை மெய்ப்பிக்கவோ! அன்றிக் "கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோபோல் யாங்கணும் பிறந்ததில்லை" என்ற பாரதியின்வாக்கைப் பொய்ப்பிக்கவோ என்னவோ! தமிழ்நாட்டை வந்தடைந்தார் தைரியநாதர். இவர் சமைத்த தேம்பாவணிஎன்பது ஓர் பரந்துவிரிந்த ஆழ்கடல்போன்றது. இதன் கட்புகுந்து கவிநயம்ஆராய்தல் நுண்மாணுழைபுலம் மிக்கவர்க்கேஅன்றி, என்போன்ருர்க்கு ஒருசிறிதும் இயலுவதுஅன்று. எனினும், ஆசைவெட்கமறியாது என்றபடி, ஆசையால்உந்தப்பட்டு, பெரியார் பிழைபொறுப்பர்என்ற எண்ணத்துடன் என்நாவில்விழுந்த சில தேன்துளிகளின் தன்மையைவிளக்க முனைந்தேன். ஆகையால், இதனைக் கண்ணுறும் பேரறிஞர்கள் குற்றங்குறைகள்கண்டு குமுருதொழிவர் என்றெண்ணுகின்றேன்.

தேனையுண்ட வண்டும், மதுவையுண்டமனிதனும் எப்படி அவற்றை மறக்கமுடியாமல் மயங்கநேருமோ அதேபோல் தேம்பாவணிஎன்னும் தேன்கோப்பையில்இருந்து சிந்தும் தேன்துளிகளைச் சுவைத்தோர் சும்மாவிரார். இஃது புரட்சியின் நூற்ருண்டு. கலையிலும், காவியங்களிலும் புதுமைகள்புகுகின்றன. ஆயினும், நம்தமிழறிஞர் தேம்பாவணியின் தெள்ளியநடையினை அறிந்தாரல்லர். எனினும், கிறிஸ்துவர்களானநாம் நம் தீந்தமிழ்ப்புலவரை மறக்கவில்லை. அவர்அருளியகாவியம் நம்மிடையே ஓர்தனிஎழுச்சியை உண்டுபண்ணிவிட்டது. அவர் சமைத்த காவியத்தைக் கலைக்கண்கொண்டுபார்க்குமுன், அவர்வரலாற்றைச் சுருங்கியமுறையில் வரலாற்றுக்கண்கொண்டு ஆய்தல்தகும்.

"தோன்றில்புகழொடு தோன்றுக" என்ற முதுமொழிக்கிணங்க நம்திலகம் 1680-ம் ஆண்டில் பிறந்தார். பெற்ருேர் கான்ஸ்டானியுஸ் பெஸ்கி என்று பெயரிட்டழைத்தனர். இதுவே தமிழில்தைரியநாதரென்று விளிக்கப்படுகின்றது. பன்மொழி வித்தகராம் வீரமாமுனிவரின்வரலாறு பலரும் பன்முறைகேட்டு மகிழ்ந்த பழங்கதையாம். ஆகவே, இவர் பாரதநாட்டில் பரமனின் தொண்டையிட்டுத் தங்கியிருந்தபொழுது நிகழ்ந்தசிலசுவைமிக்க சம்பவங்களைக்கண்டு அப்பால் செல்லலாம்.

**பண்டாரங்களும் பன்மொழிப்புலவரும்:** கோவையிலே வேதப்பணியைத் தொடக்கி, திருநெல்வேலியிலே தமிழறிவை வளர்த்து, கல்பட்டியிலே கஷ்டப்பட்டு, திருச்சிராப்பள்ளியை வந்தடைந்தார் நம்பாவலர். இவர் திருச்சிக்குஅருகாமையில் அமைந்திருக்கும் ஆவூர்என்னும் ஊரில்தங்கிப் பிறசமயத்தாரோடுவாதிட்டுவந்தார். இவர் பன்மொழிப்புலமையையும்வாதிடும்வன்மையையும்கேட்டுப் பகைபாராட்டி வாதிடவந்தார்கள் சிலபண்டாரங்கள். பலவிதமான பந்தயங்களில் தோற்றவர்சடையறுபடலும் ஒன்று. பண்டாரங்கள் வாதத்தைத்தொடங்கி முடிவில் முடிக்காமல் திண்டாடினர். தோற்றவர்களின் சடைகள் அறுக்கப்பட்டன. வெட்கமுற்ற பண்டாரங்கள் அக்கரைச்சீமையைநோக்கி எடுத்தனர்ஓட்டம். இவர்களின்சடைகள் திருக்காவலூரிலேயுள்ள கோவில் மண்டபத்தில் வைக்கோல்கட்டுப்போல் கிடந்தனஎன்பது திருச்சிராப்பள்ளிவாசிகளின்மத்தியிலே வழங்கிவரும் ஓர்கதை.

**முனிவரின் நகைச்சுவை:** பலகவிராயர்களிடம் பாடங்கேட்ட நம்பாவலர் அக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த நகைச்சுவைநடையை மறந்தாரல்லர். மேல்நாட்டாரின் நகைச்சுவைக் கதைகளுக்கு எவ்விதத்திலும் சளைக்காதமுறையில் பரமார்த்தகுருவின் கதையைப் பண்புடன்அமைத்து நமக்களித்தார். சோழவளநாட்டில்உள்ள திருப்பதிகளிலே பெயர்பெற்றது அங்குள்ள வைத்தீஸ்வரன் கோவில். அக்கோவில் அமைந்தபதியை வேளூர்என்று விளித்தனர் அன்றையசோழர். இப்பதியை வந்தடைந்த தைரியநாதர் இதன்பெருமையை அறிந்து,

"வாதக்[illegible]லாம்தமக்கு மைத்துனற்கு
நீரிழிவாம்
போதப்பெருவயிரும் புத்திரற்கு
— மாதரையில்
வந்தவினைதீர்க்க மருந்தறியா
வேளூரார்
எந்தவினை தீர்த்தார் இவர்"

என்றபாட்டைப் பாடினுரென்றும், இவருடைய கவித்திறத்தைக்கண்டு ஆங்குஉள்ளாரனைவரும் ஆச்சரியப்பட்டதாகவும் ஒருசரிதம்வழங்கப்படுகிறது. இதன்கண் அடங்கிய உண்மை ஆராய்ச்சிக்குரியது.

**தேம்பாவணியின் ஆசிரியர் வீரமாமுனிவரா?** இது ஒருகேள்வியாஎன்று சிலர்கருதலாம். இத்தாலிநாட்டில் பிறந்து இறைவன்அருட்துணையால் இலகுவில் மொழிப்புலமைபெற்ற நம்முனிவரைப்பற்றி ஐயுறல் தக்கதொன்றல்லவென்ருலும் அவரின் மொழிப்புலமையில் ஐயம்கொள்வோர் அறியாமையைப் போக்குவதால் நம்வித்தகரின்பெருமை விண்ணளாவ உயரும்என்பதில் சந்தேகம் இல்லை. மு. அருணுசலம் என்னும் பெரியார் "கூறப்பநாயக்கன் காதல்" என்னும்நூலின் முகவுரையில், தேம்பாவணியைத் தைரியநாதர் சுப்பிரதீபக் கவிராயரைக்கொண்டு எழுதித் தன்பெயரில் பதிப்பித்தார்என்னும் கருத்துப்பட எழுதியுள்ளார். கத்தோலிக்கசமயம் சரியாகப்பரவாத அந்நாட்களில் "சுப்பிரதீபக் கவிராயர்" போன்ற ஓர்புறசமயத்தினர் கத்தோலிக்க சன்மார்க்கத்தின் போதனைகளைச் சரிவரஅறிந்து அதனைக் கவிக்குக்கவி கற்பனைபெருக்கெடுத்தோடும் காவியத்தில் அமைத்தார்என்று கூறுதல் சிந்திக்கத்தக்கது. மேலும் அப்பெரியார் அங்ஙனம் அமைத்திருந்தாலும் அக்காலச் சைவர்கள் அவரைஉயிருடன் அமைதியாகவாழவிட்டிருப்பார்களா? என்பது ஆராய்ச்சிக்குரிய விடயமாகும். இதுதவிர இவர் நம்சுவாமியவர்களின் ஆசிரியராய்இருந்தார் என்பதற்கும், அவர் நூலியற்ற இவர் துணைபுரிந்தார் என்பதற்கும் போதிய ஆதாரங்களில்லை. எனவே, இக்கூற்றுப் பொய்க்கூற்றென்று புலப்படுகின்றமையால் வீரமாமுனிவரே தேம்பாவணியை இயற்றினுர்என்பது அங்கைநெல்லிக்கனி.

(தொடரும்)

# புதியகுரவரின் முதற்திவ்வியபூசை

மாசித்திங்கள் ஐந்தாம்திகதி செவ்வாய்க்கிழமை ஓர் இன்பநாள். அன்றுதினம வவுனியா, அர்ச். அந்தோனியார்கோவில் அழகுற அலங்கரிக்கப்பெற்று அவ்வழியாகச்சென்ற அத்தனை பேர்களின்கண்களையும் ஈர்த்துநின்றது. பள்ளிச்சிறுர்களும், பாலர்களும், ஆடவர்களும், பெணகளும் ஆங்காங்கிருந்து திரளாகவந்துகூடினுர்கள். அநேககுருமார் தத்தம்பங்குகளிலிருந்து ஒவ்வொருவராகவந்து ஒன்றுகூடினுர்கள். யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கைநாயகி குருமடத்து மாணவர்களும் தங்கள் அதிபர்சுவாமிகளைப் பின்தொடர்ந்து வந்துசேர்ந்தார்கள். இவர்கள் எல்லோரதும் சமூகத்திலுந்தான் சென்ற 4-ந்திகதி மகாவந்[illegible]ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர[illegible]ர்களால் யாழ்ப்பாணப் புதிய ஆ[illegible]க்கோவிலில் குருப்பட்டம் அருளப்[illegible]பெற்ற வண. ஜே. பெனடிக்ற் தே[illegible]வராஜ்சுவாமியவர்கள் தமது முதற்திவ்வியபூசைப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

புதியகுரவர் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெற்ற அன்றுதினம் அநேக குருப்பிரசாதிகள் சமேதராய் யாழ்ப்பாணத்திலிருந்து புகையிரதமார்க்கமாய் மாலை 5 மணிவரையில் இங்கு வந்துசேர்ந்ததும வவுனியாப் பட்டின சபைத்தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம்அவர்களால் மாலைசூட்டி வரவேற்கப்பெற்று, மோட்டார்ரதத்திலே ஆடம்பரஊர்வலமாக வவுனியா அர்ச் அந்தோனியார் ஆலயவாயிலை அடையவே சத்தோலிக்கவாலிப சமூகசேவாசங்க தலைவர் திரு. எ. செபஸ்தியாம்பிள்ளை அவர்களால் மறுமாலை சூட்டப்பெற்ருர். ஏனையகுரவர்கள் புடைசூழப் புதியகுரவர் ஆலயஞ்சென்று 'தெதேயும்' எனும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்அருளினுர்.

வன்னிநாட்டின் முதற்குரவராகிய சுவாமியவர்களின் உற்ருர் - உறவினரும், அன்பர்களும் பயபக்தியுடன் அமர்ந்திருக்க, தம்மை வரவேற்கும் பான்மையாகக் காட்சியளித்துநின்ற பலிபீடத்தண்டை புதியகுரவர்ஆசாரத்துடன்சென்று பூசை வஸ்திரங்கள் தரித்து, உதவிக்குரவராகத் தமதுகுருமடத்து அதிபரையும், பூசைப்பரிசாரகராகத் தமது இருசகோதரர்களையும் துணைகொண்டு திவ்வியபூசைப்பலியை ஆரம்பித்தார். அதன்மத்தியில் அதிவண. சற். என். குரூஸ்சுவாமியவர்கள் "ஆண்டவர் எனக்குச்செய்தருளிய சகலஉபகாரங்களுக்கு[illegible]கைம்மாருக யான் என்னத்தைச்செய்வேன். இரட்சணியபாத்திரத்தைக் கையிலெடுத்து ஆண்டவருடையநாமத்தைச் சொல்லிக்கூப்பிடுவேன" என்பதைத் தமதுவிருதுவாக்கியமாகக்கொண்டு குருத்துவத்தின் மகத்துவத்தையும், குருவும்பலிப்பொருளும் ஒன்றென்பதையும், பெற்ருரின் தியாகசிந்தையையும் விளக்கித் தேன்மாரிபோன்று ஆன்மாக்களை ஊடுருவும்படியாக ஓர் இனிய பிரசங்கம் நிகழ்த்தினுர்.

திவ்வியபூசையின்பின் அங்குகுழுமியிருந்தஅனைவரும் அவரை வவுனியாக் கத்தோலிக்கபாடசாலைக்குஅழைத்துச் சென்ருர்கள். மங்கலகரமாகச் சிறந்து விளங்கிய பாடச[illegible]லையில் அவர்கள் தங்கள் அருமைக்குரவருக்கு அநேக பூமாலைகளும், பாமாலைகளும் சூட்டினர். அத்துடன் குரவரின் பெற்ருேருப், நெருங்கியஉறவினரும் பூசைப்புத்தகம் பூசைப்பாத்திரம், செபப்புத்தகங்கள், மற்றும்பல அன்பளிப்புகள் வழங்கினர். காலஞ்சென்ற வெலிச்சோர்ப்பிள்ளைமூப்பரின் பௌத்திரர் திரு. ஏ. எம் பூலோகசிங்கம் அவர்களால் அழகியவேலைப்பாடமைந்த வந்தனேபசாரப் பத்திரம்ஒன்று படித்து வழங்கப்பட்டது. ஈற்றில் புதியகுரவர் யாவருக்கும்நன்றிபகர்ந்து, தேவனின் திராட்சைத்தோட்டத்தில் அன்புச்சேவைபுரிய இன்னும்அநேகவாலிபர்கள் வன்னிநாட்டிலிருந்து முன்வரவேண்டுமென்றும், இதற்காக நல்ல தேவனைப்பார்த்துத் தினமும்மன்ருடிவரவேண்டுமென்றும்கூறி அனைவர்க்கும் தம்திருக்கர ஆசியளித்து உள்ளம் பிரியாதவராய் விடைபெற்றுக்கொண்டார். அத்தருணம் அங்குகூடியிருந்த மக்களினதும், மற்றும்அநேக இந்தப் பிரமுகர்களினதும் சந்தோஷமும், முகமலர்ச்சியும் சொல்லுந்தரமன்று.

இதனைத்தொடர்ந்து வவுனியாப்பங்குக்குரவர் வண. எஸ். வேந்தர்கோன் சுவாமிகளின் வரவேற்பிலே குருமனையில் அங்குசமுகமானகுருமார், குருத்துவமாணவர்களுக்கு நண்பகல்விருந்து பரிமளிப்பாக நடந்தேறியது. இதில் ஐம்பதுகுரும[illegible]ர்மட்டில் கலந்துகொண்டார்கள். பின்பு மன்னர் - மாதோட்ட மூப்புச்சுவாமியாராகும் அதிவண. ஜே. நிக்கொலஸ், அதிவண. பிலிப்பொன்னையா, வண. பாலசுந்தரம், அதிவண. பிறட்ரிக் சக்கெற் (இலங்கைநாயகி குருமடஅதிபர்) எனும் குரவர்கள்முதலியோரால் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. இவர்கள்பேசியபோது: புதியகுரவரின் பண்புகளையும், அவரின்நற்குணங்களையும் எடுத்துக் காட்டினுர்கள். பலவருடங்களாக யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே புதிய குருப்பிரசாதிகள் அதிகமாகத் தோன்ருததை வருத்தத்துடன்கூறி, வருங்காலத்தில் குருத்துவ அழைத்தல்பெருகிப் போதியகுருமார் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். தேவகிருபையால் மறுவருடத்தில் யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்கென இலங்கையில் மூன்றுபேரும், பூனைவில்ஒருவரும், ரோமையில்ஒருவருமாக ஐந்துபேர் குருப்பட்டம்பெறும் அந்தநன்னுளை ஆவலுடன் காத்திருப்பதாகக் கூறினுர்கள்.

முடிவில் புதியகுரவர் எழுந்து, தேவனின் அளவற்றஇரக்கமே தமது இவ்வுயர்ச்சியின் காரணமென்றும், தமக்குச்சகலத்திலும் ஞானவழிகாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னித் தபால்

நாட்டின்முன்னேற்றத்தையே இலட்சியமாகக்கொண்டு கடந்தசில ஆண்டுகளாக நான்எழுதியனுப்பிய கட்டுரைகள், மற்றும்செய்திகளை நல்வரவேற்று வெளியிட்டுவந்த "காவலன்" ஆசிரியர்க்கும்; அவைகளை ஆர்வத்துடன்படித்துவந்த வாசகநேயர்க்கும் வன்னித்தூதன் சோபனங்கூறி இப்புத்தாண்டிலும் தனதுவிஷயங்களை ஆரம்பிக்கின்றான்.

நிற்க, கோளும், குண்டணியும் உள்ளபடியே நாட்டைப் பரிநாசஞ் செய்யக்கூடிய அணுக்குண்டுகள் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், இவற்ருல் செட்டிகுளப்பகுதியிலுள்ள குட்டிக்கிராமங்களி[l]டைக் கட்சிப் பிரிவுகளும், கலவரங்களும காட்சியளிக்கின்றன. கோள்சொல்லும் நாவானது ஆன்மாவைக் கொல்லுகின்றது. அவ்வாருயின் கோள்கேட்கும் காதைப்பற்றி என்சொல்வது? இப்படியாகக் கோள்சொல்லுகிறவர்களைக் குட்டிக்கிராமங்களைக்கெடுக்கும்கோடரிக்காம்புகளென்றே கூறவேண்டும்.

**காலபோக வேளாண்மை :—** இம்முறைகாலமழை அதிகம்பெய்யாததால் காலபோகவேளாண்மை கேவலமாகக் காணப்படுகின்றது. புழுதிவேளாண்மைதான்புத்துயிர்கொடுக்கும்போல் தோன்றுகின்றது. இந்நிலையை அவதானிக்கும் கமக்காரரின் மனம் படும்பாடோ இம்மட்டன்று. கிராமங்களிலுள்ள குட்டிக்குளங்களின் கதியும் அதோகதியாயிற்று. அதனுல் நீர்ப்பாய்ச்சுவதில் கமக்காரரிடையே சண்டைசச்சரவும், பிணக்குகளும் தலைகாட்டுகின்றன. கமவிதானைமாரின் கதியோ அதோகதிதான். செட்டிகுளப்பகுதி நீர்ப்பாய்ச்சல்அதிகாரி ஏ. மரியாம்பிள்ளை அவர்கள் குளங்களில் அவ்வப்போதுள்ளநீரையாவது அவம்போக்காது பாய்ச்சுதற்கானதிட்டங்களை ஆலோசித்து அமைதியானமுறையில் பணியாற்றிவருகின்றார். இருந்தும் இனிக்கடவுள்தான் உதவியென்று உணர்ச்சிததும்பக் கமக்காரர் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

**பனிக்கொடுமை :—** இவ்வாண்டு பனியின்கொடுமையோ பகருந்தரமன்று. 'தையும், மாசியும் வையகத்துறங்கு' என்பது உண்மைதான். பரிதியின்முன் பனிபறந்துவிடும்என்ற முதுமொழியானது பனிக்குமுன் பரிதி பறந்துவிடும்என்று வீரம்பேசுகின்றது. பரம்பரையாக இங்குவதியும்மக்களே பனியைக்கண்டு பயப்படும்போது வந்தேறுகுடிகளாகிய நாம் வாழமுடியுமா? எனது வன்னிவாழ்க்கையின் அனுபவஅதிசயங்களில் இதுவும் ஒன்றெனக்கூறலாம்.

**கிராமச்சங்கம் :—** செட்டிகுளக் கிழக்குக்கிராமச்சங்கப் பகுதியிலே முதலியாகுளம் என்னும்கிராமமே மற்றும்கிராமங்களுக்கு நடுமத்தியென்றும், இவ்விடம்தான் அதற்குத்தகுதியான இடமென்றும வவுனியாத்திறை அதிகாரியால் தெரிவுசெய்யப்பட்ட கிராமச்சங்ககட்டடம் முடிவாகித் திறப்பு விழாவிற்கும் ஆயத்தம் நடைபெறுகின்றது. இதற்கு ஊன்றுகோலாக உழைத்தவரும தற்போதைய கிராமச்சங்கத்தலைவர் திரு. எஸ். பி. பொன்னையா அவர்களுக்கு இக்கிராம மக்கள் என்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்னும் இப்பகுதியிலே அடுத்தமாதம்நிகழும் கிராமச்சங்க தேர்தலுக்கான ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. அவற்றில்பல சமாதானமுறையிலும், சில கடும்போட்டிகள்மத்தியிலும் நடைபெறுகின்றன.

**கோழிவளர்ப்பு :—** இப்போது இப்பகுதிக்கிராமமக்கள் பொருளாதாரவிஷயமாய்க் கோழிவளர்ப்பதிலும், தோட்டச்செய்கையிலும் உற்சாகம் கொண்டிருக்கின்றார்கள். செட்டிகுளம், முதலியாகுளம், இலுப்பைக்குளம் முதலியகிராமங்கள் கோழிவளர்ப்பதில் முதலிடம் பெற்றிருக்கின்றன. இதற்குவழிகாட்டியாக இலுப்பைக்குளம் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியர் வில்லியம் கந்தசாமி அவர்கள் பலஇனமான கோழிகளை வளர்ப்பதிலும், தோட்டச்செய்கையிலும் தமதுகிராமத்தை ஓர்முன்மாதிரிக்கிராமமாகத் துலங்கச்செய்து வருகின்றார்.

**வவுனியாவின் முதற்குரவர் :—** வவுனியாவின் புதியகுரவர் வண. ஜே. பெனடிக்ற் தேவராஜ்சுவாமியவர்களுக்குச் சென்ற 10-2-57 ஞாயிறு வாரம் செட்டிகுளத்தில் சிறந்த ஓர்வரவேற்பு விழா நடைபெறலாயிற்று. வரவேற்புக்கு ஆயத்தமாக ஆலயபெரியதெருச் சந்தியில் சிங்காரப்பந்தர் ஒன்று அமைத்து, வீதியின் இருபக்கங்களும், ஆலயமும், அதன்மைதானமும் மகர தோரணங்களாலும், அழகியபூமாலைகளாலும், பலவர்ணக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அதிகாலை செட்டிகுளம் ஆர்ச். அந்தோனியார் ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, இவ்விசாரணைப்பங்கைச்சேர்ந்த செட்டிகுளம், முதலியாகுளம், இலுப்பைக்குளம், நொச்சிக்குளம் ஆகியாமிடங்களிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும், கிறீஸ்தவர்களும், பிறசமயத்தவர்களும் குழுமியிருந்து ஆலயபெரியதெருச்சந்தியில் வண. கட்டளைக்குரவர் வண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்கள் தலைமையில் புதியகுரவரை வரவேற்க ஆயத்தமாக வழிபார்த்துநின்றார்கள்.

புதியகுரவர் வவுனியாவிலிருந்து மோட்டார்தமூலம் காலை7-45மணிக்கு வந்துசேர்ந்ததும் மக்கள் இருநிரையாக அணிவகுத்துநின்று ஆலயம்வரை ஆடம்பரபவனியாக அவரைஅழைத்துச்சென்றனர். அங்கே "கர்த்தரின் படைப்புகள் அனைத்துமே" என்றகீதம் இசைக்கப்படப் புதியகுரவர் திருவஸ்திரங்கள் அணிந்து பலிபீடத்தில் ஏறியபோது ஆலயம் அளித்துநின்ற பக்திப்பரவசகாட்சியோ பகருந்தரமன்று. அவ்வேளை புதியகுரவரின் பெற்றோரும், மற்றும்பெரியோருமாகப் பெருந்திரளானமக்கள் சமுகமாயிருந்து திவ்வியபூசைகண்டுபரமானந்தமுற்றார்கள். பூசைவேளை ஆசிரியர்களும், மாணவர்களும் இன்பகீதம் இசைத்தார்கள்.

பூசைமுடிந்ததும் செட்டிகுளம் கத்தோலிக்கபாடசாலை மண்டபத்தில் வரவேற்புவிழா சிறப்பாக நடைபெறலாயிற்று. செட்டிகுளம் புகையிரதவீதி மேற்பார்வையாளர் திரு. எஸ். மரியாம்பிள்ளை அவர்கள்தலைமையில் புதியகுரவரைக் குருமனையிலிருந்து ஆடம்பரமாக அழைத்துச்சென்று உயராசனத்தில் அமர்த்தியதும் செட்டிகுளக் கோவில்மூப்பர் தொ. அந்தோனிப்பிள்ளை அவர்களால் மணிமாலை சூட்டப்பட்டது. கோவிலைச்சேர்ந்த இளம் மாதர்கள் பாமாலைசூட்டினர் கோவில் சக்கிறிஸ்தாம் அ. சூசைப்பிள்ளை அவர்கள் வந்தனேபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தார். கோவில்மூப்பர் அன்பளிப்பு அளித்துநின்றார். விழாத்தலைவரும், நொச்சிக்குளம் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் எம். சி. யோசெவ்எஸ்பீரியர் அவர்களும், செட்டிகுளம் அரசினர்பாடசாலைத் தலைமைஆசிரியர் வி. கந்தையா அவர்களும், வண. கட்டளைக்குரவர் அவர்களும் முறையே நிகழ்த்திய சிறந்த சொற்பொழிவுகள் சபையோரைச் சிந்திக்கச்செய்தன.

ஈற்றில் புதியகுரவர் காம்பீரமாக எழுந்து, வளமிக்க இந்தவன்னிப்பகுதியில் பன்னூற்றுக்கணக்கான குருப்பிரசாதிகள் பலுகிப்பெருகவேண்டுமென்றும், குடும்பத்துக்குஒருவராக ஒரு பிள்ளையைக் குருமடத்துக்கு அனுப்பவேண்டுமென்றும்கூறித் தம்மைமவரவேற்றதற்காக ஆழ்ந்தநன்றிதெரிவித்துநின்றார். பின்னர் நொச்சிக்குளம் கத்தோலிக்கபாடசாலைத் தலைமை ஆசிரியர், ஆங்கிலஆசிரியர் இ. ஆர். ஆசீர்வாதம், உதவிஆசிரியை ஜே. றெஜீனு என்பவர்களால் சித்தஞ்செய்யப்பட்ட நடனமும், "குடும்பத்துக்கு ஒருகுரு" என்ற நடித்தலும் சபையோரைக் குதூகலிக்கச்செய்தன. முதலியாகுளம் கத்தோலிக்கபாடசாலை மாணவனும், செட்டிகுளம் கத்தோலிக்க பாடசாலை மாணவியாலும் தேவ அழைத்தல்என்னும் விஷயம்பற்றித் திறம்படப்பேசப்பட்டு, செட்டிகுளம் கோவில்சக்கிறிஸ்தாமால் நன்றிகூறப்பட்டதும்புதியகுரவர் சமுகந்தந்த அனைவருக்கும் தமதுஆசீர்வாதம் அருளினர். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அருளப்பட்ட காலைப்போசனத்துடன் வரவேற்புவிழா இனிதே நிறைவாயிற்று.

— வன்னித்தூதன்

## காவலூர்க் கடிதம்

**லூர்தன்னை திருநாள் :** ஊர்காவற்றுறை கீழ்த்திசையில் திருக்கெபி கொண்டிருக்கும் லூர்தன்னையின் திருநாள் சென்ற 17-2-57காலை பாடற்பூசையுடன் முடிவெய்தியது. முதல் நாள்சனிவாரம் திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்திலே ஊர்காவற்றுறைக் கிறீஸ்தவர்கள் பன்னூற்றுக்கணக்கில் கலந்துகொண்டார்கள். மின்சார தீபாலங்காரஞ்செய்யப்பட்டிருந்த மாதாவின் திருக்கெபி சோதிமயமாய்விளங்கியது. சுற்றுப்பிரகாரமுடிவிலே வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் மாதா விரும்பும் தபத்தின் தன்மையையும், அவசியத்தையும்விளக்கி அரியபிரசங்கஞ்செய்தார். பின்னர்அவராலும, வண. வி. ஆர். தார்சீசியஸ், வண. ஜே. ஜீவரத்தினம்சுவாமிகளாலும் வேஸ்பர் பாடிமுடிந்ததும, நற்கருணை ஆசீர்வாதம அருளப்படலாயிற்று.

**கல்லூரி ஞானவொடுக்கம்:** ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களின் வருடாந்த ஞானவொடுக்கம் சென்ற 13-2-57புதன்கிழமைமாலை ஆரம்பமாகிப் 16-2-57மாலை முடிவெய்தியது. கல்லூர்மீசாம், வண. பி. சூசைப்பிள்ளை சுவாமியவர்கள் ஞானவொடுக்கப் போதகஞ்செய்தார். அவரது அரிய போதகங்கள் மாணவர்—ஆசிரியர்களின் இதயங்களிலே புதியஞானோற்சாகத்தை உண்டுபண்ணியன எனலாம். 16-2-57மாலை ஞானவொடுக்கமுடிவில் பாடசாலைமாணவரும், ஆசிரியர்களும் ஞானவொடுக்க போதகரைச்சந்தித்து நன்றிதெரிவித்தனர். மாணவன் செல்வன் எஸ். பி. அந்தோனிப்பிள்ளை மாணவர்சார்பில் நன்றியுரைகூறினர்.

— நிருபர்

## லூர்துபதி அன்னையின் திருஉற்சவம்

முல்லைத்தீவுப் பிரிவினைச்சேர்ந்த வற்றுப்பளையில் நலமாகஎழுந்தருளியிருக்கும் எமதுலூர்துஅன்னையின் வருடாந்தஉற்சவம் அப்பதியில்வதியும் பக்தர்களால் சென்ற 11-2-57 திங்கள் வாரம் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. உற்சவத்திற்கு முந்திய சில தினங்களாகத் தேவஅன்னைக்குச் செய்யப்பட்ட நிந்தைஅவமானங்களுக்குப் பரிகாரமாகச் செபமாலைசெபிக்கப்பட்டு வந்தது. உற்சவத்திற்கு முந்தினதினம் நாலாதிக்குகளிலுமிருந்து திரளான பக்தர்கள் அன்னையின் அருளைப்பெற ஆலயத்தின்கண்ணே குழுமிருக்க வண. ஏ. சியொர்ப்காசுவாமியவர்கள் தேவதாயின் மகத்துவத்தைக் குறித்துச் செய்தபிரசங்கத்திலே அன்னையின் அருளைப் பெறவேண்டுமேல் குடும்பச் செபமாலை செபிக்கவேண்டுமென்றும், அடுத்துநிகழும் 1958-ம்ஆண்டு தேவதாயார் லூர்துகெபியில் காட்சியளித்த நூறுவதுஆண்டுவிழா வருகிறதென்றுங்கூறி, அவ்வருடத்திலே நாம் தேவஅன்னையின் திருநாளை அதிகசிறப்பாகக் கொண்டாடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பின்னர் பாடகர்குழாமின் இனியகீதங்களிடையே மாலைஆராதனைபாடி முடிந்ததும் அழகியதோர்கேடயத்தில் தேவஅன்னையின் திருச்சுரூபம் எழுந்தேற்றஞ் செய்யப்பட்டுச் சிறுர்கள் கேடயத்தைத் தாங்கிச்செல்ல அலங்கரிக்கப்பட்டிருந்தவீதியினூடே இன்பகீதங்கள் இசைத்தவண்ணம் ஆலயத்தைவலம் வந்து ஆலயத்தைஅடைந்ததும் ஆசீர்வாதம்அருளப்படலாயிற்று. 11-2-57 திங்கள்வாரம் காலை 7மணியளவில் ஆலயம்உள்ளும்புறமும் கண்ணைக் கவரும்வகையிலே அலங்கரிக்கப்பட்டிருக்க, திரளானபக்தர்கள் குழுமியிருக்கத் திருநாட்பூசைநிறைவேறியது. அவ்வேளை பாடசாலைச்சிறுர்கள்சிலர் புதுநன்மைபெறும் பாக்கியத்தை அடைந்துகொண்டார்கள். ஈற்றில் அன்னதானம்வழங்கப்பட்டு உற்சவம் நிறைவாயிற்று.

— நிருபர்

---

டிகளாக அமைந்த அநேக குருமார்களுக்குத் தாம் அன்புடன் நன்றிகூறுவதாகவும் பகர்ந்தார். அத்துடன் தேவஇரக்கத்தால் இலங்காநாயகி தேசீய குருமடம் மிகவும்பக்தியும், புத்தியும் நிறை குருமாரை யாழ்ப்பாணமேற்றிராசனத்திற்குத்தந்துதவுமென்று தேவஉதவியோடு நம்பிஇருக்கலாமென்றும் கூறி அங்கு சமுகம்கொடுத்திருந்த குருமார்அனைவருக்கும் தமது இதயப்பூர்வமான நன்றியைத்தெரிவிக்கலானர். புதிய குருவானவரை நல்லதேவன் என்றும் புனிதப்படுத்துவாராக!

**ஓர் குருத்துவமாணவன்**
தேசீயகுருமடம், கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 25-ம் வருட மரணஞாபகம்

திருமதி தொ. ரோசம்மா அவர்கள் மரணத்திரையில் மறைந்த 25-வது வருட நிறைவுதினம் நிகழும் 23-2-57-இல் பூர்த்தியாகிறது. அன்று காலை 6-30 மணிக்கு வல்வெட்டித்துறை அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் அவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை நடந்தேறும். இதனைக் கண்ணுறும் கிறீஸ்துவர்கள் இவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

தாயாரை இழந்து துயருறும் தனயன்

தொ. தம்பிராசா
(எக்சைஸ் இன்ஸ்பெக்றர்)

---

## முதல்வருட மரண ஞாபகம்

பிறப்பு : 23—9—1923 இறப்பு : 25—2—56

**இம்மண்ணில்நின்று மறைந்தாலும் எம்மனதில்என்றும் மறையாத**

திருமதி யுபிறேசியா பீற்றர் மரணத்திரையில்மறைந்த முதல்வருடம் நிகழும் 25-2-57-இல் பூர்த்தியாகிறது. அன்றுகாலை 6 மணிக்குச் சுண்டிக்குளி அர்ச். அன்னம்மாள் கோவிலில் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

இதனைக்கண்ணுறும் சகலகிறீஸ்துவர்களையும் இவவின் ஆன்மசாந்திக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக் கொள்ளுமாறு மிகுந்ததயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மனைவியை இழந்து துயருறும்,
எல். ஏ. பீற்றர்

St. Anne's Lane,
Chundikuli,
Jaffna.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திவ்வியயேசுவின் அளவில்லாத இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் சகாயத்தாலும் நான்கேட்டகாரியம் பூரண திருப்தியாக நிறைவேறியதால் நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

J. G.

* * *

கிறீஸ்துராசாவின் கிருபையாலும், சதாசகாயமாதாவின் அருளாலும் நான் சென்றமுறை பரீட்சையில் சித்தியடைந்ததற்கும், அர்ச். பாத்திமாமாதா, அர்ச். தெரேசம்மாள் இவர்களிடம் நான்கேட்ட வரங்கள் அனுகூலமடைந்ததற்கும், நன்றிதெரிவித்து நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன். இன்னும் நான் இவர்களிடம் கேட்டிருக்கும் வேண்டுதல்கள் கிடைக்கும்படியாக இரந்துகொள்ளுகின்றேன்.

மட்டக்களப்பு Miss. Ignatius

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 44/C

சிறுபிள்ளைகளுக்கும், அவர்களின் ஆதனத்திக்கும் கார்டியனும் மேற்பார்வைகாரியுமாகிய G. S. மரியாம்பிள்ளை கைம்பெண் மரியம்மா

—பாதுகாவலன்

1. மரியாம்பிள்ளை சத்தியவான்
2. எம்மிலியா, லலிதா சிறுபிள்ளைகள்
3. S. P. யோச்சு, 5-ம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

—பிரதிவாதி

யாழ்ப்பாணம், பெரியகோட்டின் 44/C இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒருஅண்டுக்காணி 1957-ம் ஆண்டு பங்குனிமாதம் 30-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளியில் மாவிலங்கலட்டி வயல் என்னும்காணி நி. இ. 8 குழி 10⅞. அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை : கிழக்கு— றோட்டு. வடக்கு— சந்தியாப்பிள்ளை சவிரிமுத்துவின் ஆதனமும், வேலுப்பிள்ளை சின்னையாவின் ஆதனமும். மேற்கு — வாய்க்கால். தெற்கு— A. V. வஸ்தியாம்பிள்ளையும், Dr. G. W. புவிமனசிங்கியின் ஆதனமும்.

J. மனவல்உலாந்தா அவர்களால் வரையப்பட்ட 397-ம்இலக்கப் படத்தில் குறிக்கப்பட்டலொட்டு 1. இதில்மேற்குப் புறமாக ஐந்துபரப்பில் ⅔பங்கு.

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
11-2-57.

---

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**தேகவியோகம் :—** தாண்டவன் வெளி, பரிசுத்தவியாகுலமாதா ஆலய பங்கைச்சேர்ந்த பி. மைக்கல் அப்புசிங்கோஎன்னும் ஆசிரியர் தமதுஇல்லத்தில் சென்ற 15-2-56காலை தம்முடைய மனைவிமக்கள், சுற்றமித்திரர் பரதவிக்க 43-வதுபாரயத்தில் பரமபதமடைந்தார்.

இன்னார் கடந்தகாலத்தில் தாண்டவன்வெளி ஆண்கள்பாடசாலையிலும், புளியடிக்குடா, அரசடித்தீவு, அம்பிளாந்துறைமுதலாம் இடங்களிலும், திறம்பட ஆசிரியசேவைபுரிந்து மாணவரதும், ஆசிரியர்களதும், பெற்றோர்களதும் பாராட்டைப்பெற்றுள்ளார்.

இன்னாரது பிரேதஊர்வலம் வண. கட்டளைக்குரவருட்பட மூன்றுகுருப் பிரசாதிகளின் துக்கசங்கீதங்களுடன் கள்ளியங்காடு சேமக்காலைவரையும் நடைபெற்றுப் பி. ப. 5 மணியளவில் நல்லடக்கம் நடந்தேறியது.

இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக 22-2-57காலை 6-30மணியளவில் இப்பங்குஆலயத்தில் வண. ஜோர்ஜ் ஈ. எவ். வம்பேக்சுவாமியவர்களால் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். விசுவாசிகள் அனைவரையும் இவரதுஆன்மஇளைப் பாற்றிற்காக மன்றாடும்படி அவரின் மனைவி, மக்கள்சார்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—நிருபர்.


# G. C. E. பரீட்சைகளுக்கு

1. உயர்தர எண்கணிதம்
சிவக்கொழுந்து மஹாதேவன்
ஒப்புயர்வற்ற சிறந்தநூல்—ரூபா 4-00

2. உலக பூமிசாஸ்திர விளக்கம்
சிவக்கொழுந்து
இருபாகங்களுமடங்கிய முழுத்தொகுதி—ரூபா 7-75

3. உயர்தர அக்ஷரகணிதம்
விரைவில் வெளிவரும்—ரூபா 4-50

சகாய விலைவிபரங்கட்கு எழுதுக :
மனேஜர்,
வடலங்கா புத்தகசாலை—பருத்தித்துறை


## நாளுசங்கதிகள்

● சென்னைச் சட்டசபையின் மொத்தமான 205 ஸ்தானங்களிலும் போட்டியின்றித் தெரிவுநடைபெற்ற இருஸ்தானங்களும் நீங்கலாக ஏனைய 203 ஸ்தானங்களுக்கும் 885 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களிலே காங்கிரஸ்கட்சி 202 அபேட்சகர்களையும், கம்யூனிஸ்தகட்சி 56 அபேட்சகர்களையும், திராவிடமுன்னேற்றகழகம் 117 அபேட்சகர்களையும் நிறுத்தியுள்ளன.

* * *

● நாற்பதினாயிரம் ஹங்கேரியர்கள் சீனவுக்கு நாடுகடத்தப்பட விருக்கிறார்களென்று சமீபத்திலே ஓர்செய்தி பரவலாயிற்று. அதனால் இதைத் தடுத்து வைக்குமாறு உடனே தானே நடவடிக்கை எடுக்கும்விஷயமாய் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

* * *

● உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில்ஒன்றான இந்தியாவிலே பொதுத்தேர்தல் இம்மாதம் 24-ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. இத்தேர்தலிலே இந்தியாவின் சனத்தொகையில் ஏறக்குறையப் பாதிப்பேர் —அதாவது 19 கோடியே 30 லட்சம் மக்கள் வாக்களிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதம் 25-ந் திகதியன்று மாத்திரம் 594 தொகுதிகளில் வாக்களிப்புநடந்தேறும்.

* * *

● யேசுசபையை அடியிட்டவரான அர்ச். இஞ்ஞாசியார் தியான சம்பிரதாயசபையை அடியிட்டவரான அர்ச். பிலிப்புநேரியாருடன் அதிகம் உற்ற நண்பராக இருந்துவந்தார். இருவரும் ஒரேநாளில்தானே அர்ச்சியசிட்டபட்டம் அருளப்பெற்றார்கள். அவர்களின் சிநேகபான்மை அவர்கள் அடியிட்ட சபைகளிலுமேபரந்து இன்றுமட்டுமே நிலைபெற்றிருக்கிறது.

* * *

● தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கேப்ரவுண் நகரில் ஜோர்ஜ் கமசோ எனும் 25 வயதுடைய சுரங்கத்தொழிலாளிஒருவன் வாரம்ஒன்றுக்குச் சராசரிவீதமாக 50 முட்டைகளைப் பச்சையாகக் குடித்துவருகிறான், பச்சை முட்டை அதிசயமானமருந்து; அது நோயைத் தடுக்கின்றது; ஐந்துவருடங்களுக்குமுன் நான் முட்டைகுடிக்கப்பழகினேன்; அதற்குப்பின் எனக்கு நோய்கிடையாதென்று இவன் கூறுகிறான்.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எங்கள்தஞ்சமும், அடைக்கலமுமாகிய சதாசகாயமாதாவின் இரக்கமுள்ள சகாயத்தினாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் நான்கேட்ட நன்மைகள் அனுகூலமானதினால் நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். எனது ஏனைய மன்றாட்டுகளுக்கும் கிருபைபுரிவார்களாக. இவர்களின் பரிசுத்தநாமம் எல்லோராலும் எங்கும் புகழப்படுவதாக.

நாரந்தனை ச. ச.

* * *

சதாசகாயமாதாவின் அற்புத அருளினால் எனதுமகள் மரிய ஸ்ரெல்லா என்பவளுக்கு ஏற்பட்ட கடும்வியாதி அதிசயிக்கத்தக்கவிதமாக மூன்று நாளில் பூரணசுகம் கிடைத்ததை நேர்த்திப்படி பிரசுரம்பண்ணுகிறேன்.

சதாசகாயமாதாவே! வாழ்க.

பள்ளிமுனை ச. தெரேசம்மா ரேச்

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாம்சபை மாதாந்த கூட்டம் அடுத்துவரும் சனிவாரம் 23-ம் தேதி பிற்பகல் 4-15 மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். சகோதரர், சகோதரிகள் எல்லோரும் நேரகாலத்தோடு அதற்குச் சமுகங்கொடுக்குமாறு வெகுவிநயமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பங்குனி மாதத்தில் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள் :— 1, 5, 6, 9, 15, 18, 19, 22, 25, 26, 28, 30. பொதுப் பாவமன்னிப்பின் நாட்கள்:— 1, 19, 25.

A. S. FRANCIS OF MARY
for Director

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 21-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மண்டை ஓடு

— அ. ப. —

கிரேக்கநாட்டு மாமன்னன் அலெக்ஸாண்டர் இந்த அவனிமுழுவதையும் தன் வெண்கொற்றக் குடையின் கீழ் காணவிரும்பினான். மன்னனின் எண்ணம் ஈடேறியும்வந்தது. மாஸிடோனியச் சக்கராதிபதியின் மலர்த்தாள்கள் மாமன்னர் பலரின் மணிமகுடங்களை முத்தமிட்டு மகிழ்ந்தன. சிற்றரசர்பலர் கொற்றவனின் குற்றேவல்களை எதிர்நோக்கி நின்றனர். அனங்கனின் விரல்அசைவை அரசஆக்ஞையாகவும் அவனது புன்சிரிப்பைப் பரிசாகவும் பெற அரண்மனைவாயிலில் இராசப்பிரமுகர் பலர்ஏங்கித் தபம்கிடந்தனர். மன்னவன் செருக்குற்றான். தர்மம் அவன் அசுரபலத்தைக்கண்டு தலை வணங்குவதாகவும் சத்துவம் அவன் முன் சரணடைவதாகவும் எண்ணி மனப்பால் குடித்து வந்தான். மன்னவனின் கொட்டத்தை மட்டம்தட்டத்தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தார், நரைதிரைவிழுந்த இராசகுரு தியோஜனர். அரசன் சாரிவரும் பாதையில் இருந்த ஒரு கல்லறைத்தோட்டத்தில் அந்திவேளையில் தன்கைத்தடியால் தட்டித்தட்டி மண்டை ஓடுகளைத் தேடும் மகத்தான பணியில் ஈடுபட்டார்.

மமதையையும் மாச்சரியத்தையும் தன் வெற்றிக் கவசங்களாகப் பூண்ட வேள்வேந்தன் தன் வெண்குதிரையை மெல்ல நடத்தினான். 'பித்தர், வயோதிகம் அவரது வற்றாத ஞானத்தைச் சிதைத்துவிட்டது. இதுவெறும்விருத்தாப்பியப்புலம்பல்!' என்று அலட்சியமாக அவன்உதடுகள் சில வார்த்தைகளை முணுமுணுத்தன. அடுத்தகணம் அவன் சித்தம் குழம்பியது. அங்கு அவன் தன் மனக்கண்முன் கண்ட காட்சி! ஒருமண்டை ஓடு! கர்ணகடூரமான குரலில் ஒருகோரநகைப்பு.

"குரு சிரேஷ்டரே! இதென்ன கோலம்! மாலைஒளி மங்கிமறையும் இவ்வேளையில் பயங்கரமான இச்சுடுகாட்டில் நின்று எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, மகராஜ்! தங்கள் தந்தையார் பிலிப்புவின் மண்டை ஓட்டைத் தேடுகிறேன். மணிமுடிதாங்கி மாநிலம் புகழ வாழ்ந்த மாமன்னரின் மண்டை ஓட்டிற்கும் மண்குடிசையிலும் மரத்தடியிலும் புரண்டுகிடந்த பஞ்சைகளின் மண்டை ஓட்டிற்கும் எவ்வித வித்தியாசமும் தெரியவில்லை! மீண்டும் மீண்டும் தேடுகிறேன்; கிடைப்பது அரிதாயிருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னவனே! எங்கு செல்கிறாய்? நில். உன் ஆனந்த கீதத்திற்கு அடியெடுத்துக்கொடுக்கும் அந்த அசுவத்தை இப்புறம்மடக்கு. உன்னை வேறு ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். இதுவரை நீ காணாத பலநூதனக்காட்சிகளை உனக்குக் காட்டுகிறேன் பார். பார்ப்பதோடு நில்லாமல் சிந்தனைசெய்; சிந்திப்பதோடு நில்லாமல் அவற்றைச் செயற்படுத்து. நீ நினைத்தால் இந்தத் தரணியாவையும் உனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம். ஆனால், அதைப் படைத்தவன் நீ அல்ல என்பதை அறிந்துகொள். உலகோர் உனக்கடிமையாகலாம். ஆனல், நீயா அவர்களது ஆண்டவன்? உலகை ஆளத்தெரிந்தாய். ஆனல், உன்னையே ஆளத் தெரிந்து கொள்ளவில்லை. இதன் உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமானல் என்னைக்கேள்!"

"இந்த மண்டைஓடு யாருடையது, தெரிகிறதா? இவன் கள்ளத்தராசைக் கையில்பிடித்த காதகன். அதோ அவன் வட்டிப்பணத்தால் தன்பெட்டியை நிரப்பிய பேராசைக்காரன். அவனுக் கடுத்தவன் ஏழைத் தொழிலாளரின் இரத்தத்தைத் தன் இனியபானமாகப் பருகிய தொழில்அதிபன். இந்த எலும்புக்கூடு நாத்திகம்பேசி நான் என்ற மமதை பிடித்தலைந்த பேயனுடையது. இவர்கள் எல்லோரும் ஒரே பரம்பரை. தேடினுர்கள் கோடி கோடியாக. அவற்றைவிற்றுப் பாவமூட்டைகளை வாங்கிச் செல்கிறுர்கள்!"

"இதோ அவள்! அவளது உல்லாச நடையைப்பார். அங்கநெளிவைப்பார். மேயும் குணம்படைத்த கண்களைப்பார். வாளேந்தும் மன்னர்களைத் தன் வளையேந்தும் கரங்களின் வீச்சால் மடக்கியவள். தன் எழில் உருவைக்காட்டி ஏராளமான இளைஞர்களின் இதயங்களைக் கசக்கிப்பிழிந்த காதகி. ஆடவர்களின் உள்ளங்களைப்பேதப்படுத்தித் தன் மைக் கண்களால் மயக்கிய மாபாதகி. அதோ அவள் வாழ்வின் கடைசிநாள். அவள் பரிதாப நிலையைப்பார். அவளதுஆடல் அரங்கு அந்தஆறடி நீளமும் ஐந்தடி ஆழமும்கொண்ட படுகுழி. இங்கே அவள் இடையசைத்துக் கைவீசி நடம்புரிய முடியாது. உருமாறிய அவளது நாற்றச்சரீரத்தைச் சுற்றிவட்டமிட்டுக் கொஞ்சிக் குலவும் ஆப்தநண்பர்கள் யார் தெரியுமா? புழுக்கள்!"

'அங்கொருவன் சாய்ந்தான் படுக்கையில், உடல்நலம் குன்றியவனுய், உறவினர் கலங்கினர். வைத்தியன் வந்தான். கைபிடித்துப்பார்த்துப் புருவங்களை நெறித்துவிட்டு அப்பால் நடந்தான். மரணப்படுக்கையில் இருந்த மதோன்மத்தன் தான் சாவதுநிச்சயம் என்பதை உணர்ந்தான். பேச நா எழ[illegible]வனுடைய இறுதிஆவல், ஏக்கம், உணர்ச்சிப் பிரவாகம்எல்லாம் அஸ்தமிக்கும் அவன் உள்ளத்திலேயே அடங்கிவிட்டன. காலையோ, மாலையோ, நாளையோ சாவுஎன்று காலக்கணக்கு அறியாதிருந்தான். அவன் வேலை முடிந்தது. ஓலையும்வந்தது. கட்டான அவன் தேகம் பொட்டென வீழ்ந்தது. அவன்கிட்ட ஒருவரும் இல்லை. இழவுக்கு வந்தவர்கள், குழிவெட்டு என்றனர்; பிரேதத்தைக் கட்டு என்றனர்; மண்ணை மேல்கொட்டுஎன்றனர். அப்பால் சென்றனர். மேட்டிமைக் கண்கள்குழிவிழுந்து பொய்யுரைபகர்ந்த உதடுகள் அடைபட்டு நிமிர்ந்த மார்பகம் கூனிப்போய், வீசிய கரங்கள் வேலைசெய்யமறுத்து, காம்பீர நடைபோட்ட கால்கள் தெம்பு இழந்து பயங்கர அழிவே தந்தையாகவும், புழுக்களே தாயும் தமக்கையுமாகவும் பெற்றுப்பரிமளவாடை துர்க்கந்தஒடையில்கலந்து பூரணசுயேச்சையுடன் கலையாத உறக்கத்தினுல் ஆழ்ந்திருக்கிறுன்.'

'கணப்பொழுதில் கண்சிமிட்டிமறையும் இந்த அற்பஆயுளில் எத்தனை மாய்மா

(தொடர்ச்சி 4-ம்பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணு சொல்லுவது

அருமைச் சகோதரங்களே!

ஒரு குடும்பத்தலைவன் யூகோசிலேவியாவிலிருந்து இத்தாலிக்குத் தன்குடும்பத்தை வள்ளத்தில் ஏற்றிக்கொண்டு வந்தான். ஆபத்துநிறைந்த அதிரியாட்டிற்கடலை அனுதரவாக ஏன்கடந்தான். தன்பிள்ளைகளுக்கு வேதக்கல்வி கொடுக்கவே இப்படிச்செய்தான்.

மூன்றுநாட் பயணத்துக்குப்பின் இருபத்தொன்பதுவயதுள்ள மாட்டின் பாசியும், மனேவியும், இரண்டு ஆண்குழந்தைகளும், அவனுடைய சகோதரனும் இத்தாலியில் பாறிதுறைமுகத்தைஅடைந்தார்கள். சனங்கள் அதிகாலையில் பூசைக்குப் போகும்பொழுது வள்ளம் வருவதைக் கண்டார்கள்.

மாட்டீன் கரையில்வந்துஇறங்கியதும் தனக்கு அரசியற்பாதுகாப்பு வேண்டுமெனக் கேட்டான்.

தன் பதினெருவயதுள்ள மகன் குருவாகவர விருப்பங்காட்டியபடியால்தான் தான் இப்படிப் புறப்பட்டதாகப் பாசி கூறினன்.

உங்கள் அன்புள்ள
அண்ணு

---

## மனிதா! யேசுவைப் பார்.

— ஆரையூர் அமரன் —

(ஐந்துவயதிலேஎன்ற குளிகண்ணி மெட்டு)

மாசு அடைந்துலகு
நாசமடையும் போது
நேசம் படைத்ததேவன் — மனிதா!
யேசுவைத் தந்ததைப் பார்

O

மடமை மலிந்துலகில்
கடமை நலியக்கண்டு
இடையர் குகையினிலே — மனிதா!
அடையும் துயரினைப் பார்

கொடுமை பொலிந்துலகில்
பகைமை மலிந்தபோது
வறுமை நிறையும்வாழ்வில் — மனிதா!
பொறுமை உறுவதைப் பார்

O

குளிர்மிகு சொரியிரவில்
எளிமை தெரிகிலையில்
ஒளியின் விரிகதிரில் — மனிதா!
மிளிரும் முகமதைப் பார்

O

இன்னிசைக் கீதம்தேடிப்
பொன்னெளித் தூதர்பாடி
மண்ணகம் தன்னைநாடி — மனிதா!
விண்ணக மாக்கிடல் பார்

(வரும்)

---

## கவிஞன்

"சாந்தினி"

அறிந்த யாவும் அருந்துதற்கு
அமுதம் ஆக்குவான் — தன்
அநுபவத்தில் இனிமை சேர்த்து
அழகை ஆக்குவான்
எறிந்த கல்லுக் கொளியை வார்த்து
இன்பம் ஏற்றுவான் — நீள்
இயற்கையிலே அணு அணுவாய்
எழிலைக் காட்டுவான்

●

விண்ணில் மண்ணில் ஏறியேறி
விந்தை கூட்டுவான் — கலை
வெள்ளமீது நீந்தி நீந்தி
வித்தை காட்டுவான்
கண்ணி லெங்கும் கண்டிடாத
காட்சி தீட்டுவான் — அவன் [டுவான்
கள்ளிலாது துள்ளுகின்ற வெறியையூட்

●

கோடிகோடி இன்ப மிங்கு
குவித்துக் காட்டுவான் — உயர்
கோபுரங்கள் நொடிப் பொழுதில்
அமைத்துக் காட்டுவான்
ஈடிலாத ஓவி யங்கள்
எழுதிக் காட்டுவான் — அவன்
எந்தநாளும் அழி விலாது
இங்கு வாழ்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துப் பை

ஓர்முறை வனாந்தரத்தின் வழியாய்ப் பிரயாணஞ்செய்த ஓர்அராபியன் வழி தவறி அலைந்தான். அவன் தன்னோடு எடுத்துச்சென்ற ஆகாரம்எல்லாம் முடிந்துபோக, இரண்டுநாள் இரவும்பக லும் சாப்பிட ஒன்றும்கிடையாது வருந் தினன். வனாந்தரத்திலே பசியால்வாடிச் சாகவேண்டிவருமோ என்றபயம் அவ னுக்கு உண்டாயிற்று. ஆகவே, வனாந் தரத்தின் வழியாகச் செல்லும் வியாபாரி கள், பிரயாணிகள் யாராவது வரமாட் டார்களா? என்ற அங்கலாய்ப்புடன் பாலைவனம் முழுதும் பசியோடு தவித் துச் சென்றுகொண் டிருந்தான்.

கடைசியாக, களைத்துத் தவித்து ஒரு இடத்தில் கொஞ்சம் தண்ணீர்இருந்த ஓர்கிணற்றைக் கண்ணுற்று அங்கு போனான். அந்தக் கிணற்றைச் சுற்றிப் பிரயாணிகள் தங்கியிருந்துபோன அடையாளம் காணப்பட்டது.

பசியின் கொடுமையால் தவித்தஇந்த அராபியன், பிரயாணிகள் ஏதாவது விட்டுப்போயிருப்பார்கள் என்றநம்பிக் கையோடு சுற்றுமுற்றும் தேடிப்பார்த் தான். அப்போது அங்கு ஓர்இடத்தில் கிடந்த ஓர்சிறுபையைக் கண்டெடுத் தான்.

அதன் வாய்ப்பக்கம் இறுகக்கட்டப் பட்டு அதனுள் கடினமும், உருண்டையு மான ஏதோபொருட்கள் இருப்பதாகக் காணப்பட்டது. அவன் அந்தப் பைக் குள்ளே வனாந்தரத்தில் கிடைக்கும் பேரீச்சம்பழம் ஏதாவது இருக்கலாம்; அதைத் தின்று பசியைத் தீர்த்துக் கொள்ளலாம் எனஎண்ணி, ஆவலோடு அந்தப்பையைத் திறந்து பார்த்தான். ஏமாற்றம் அடைந்தான். காரணம் என்ன? அவனது பசியைத்தீர்ப்பதற்கு வேண்டிய ஆகாரத்திற்குப் பதிலாக, அதுநிறைய விலைஉயர்ந்த முத்துக்கள் இருந்தன. அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாகி: ஐயோ! எனது பசியைத் தீர்க்க வழியில்லாத இந்த முத்துக்கள் இருந்து என்ன பிரயோசனம்? என்று அந்த முத்துப்பையைத் தூரவீசிஎறிந்து விட்டு, அந்த இடத்தில்தானே விழுந்து இறந்தான்.

---

## மண்டை ஓடு

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

லங்கள்! கபடநாடகங்கள்! எவ்வளவு மேட்டிமை இந்த இலட்சணத்தில்தான் இவன் இறைவனின் இருப்பிடத்தைக் காட்டு என்றான். இகவாழ்வின் இன் பத்திற்கு இணையுண்டோ என்றான். பொருளே இப்பூதலத்தின் சீவன்என் றான். சுகபோக்கியத்தில் புரண்டு மாய்ந்தான். அதன் இறுதி எல்லை, இப் பயங்கரஅழிவு! பார்த்திபனே, பார்!'

'மாளிகைகளில் கேளிக்கைகளும் அந்தப்புரங்களில் ஆட்டமும் பாட்டும் வீணரின் வீட்டுவிருந்து உபசாரமும் உன் கருத்தில்நின்று உன்னை இன்று உன்உல்லாசபுரிக்கு அழைத்துச்செல் லலாம்: ஆனால், மாண்டோரின் உறை விடமாகிய இச்சுடுகாட்டில்நின்று இம் மண்டைஓடு வசனிக்கும் இறைவனின் திருவாசகத்தைக்கேள். 'விருந்துவீட் டிற்குச் செல்வதைக்காட்டிலும் துக்க வீட்டுக்குச்செல்வதேமேலானது. ஏனெ னில், அங்கே மனிதனின் முடிவைக் காண்பாய்!'

புல்லரித்து நின்ற புரவியை முடுக்கி விட்டான், புரவலன். மண்டை ஓடு மறைந்தது. மமதையால் வீங்கிப்போ யிருந்த மன்னவனின் உள்ளம் இராச குருவின் எதிர்பாராத சந்திப்பிற்குப் பின்னர் வெட்கத்தால் சுருங்கியது. அந்தத் தலைகீழ் மாற்றத்தின் கருப் பொருள் மரணம். அதை அவனுக்கு விளக்கிக் காட்டிய ஆசிரியர், அந்திய வேளையில் அப்பெரியார் தேடிக்கொண் டிருந்த மண்டைஓடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org